# சோதிடமலர்

# SOTHIDA MALAR



தரமான போட்டோஸ்ரற் செய்வோர்
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
சுன்னாகம்.

உள்ளே...


அதிஷ்ட எண்ஞானம்
சைவ விரதங்களும் விழாக்களும்
அகால மரணமும் பிதிர்களும்
திருமணத்திற்கு முன்பு




விபவ ௵ ஆவணி ௴ (16-8-88—15-9-88) ரூபா:- 4-00

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 11 ❋ இதழ் 5

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

விபவ ஹூ ஆவணி மீ
( 16 - 8 - 88 )


ஸத்வாஸ்ய ரத்நாகரஸ்தம்
ஸ்ரீவத்ஸம் காஸ்யபாத்மஜம்|
ஸ்வேதவஸ்த்ரதரம் தேவம்
தம்ஸமீயும் ஸ்ரீணாத்மஜம்||

ஏகதந்தம் மஹாகாயம்
தப்தகாஞ்சந ஸந்நிபம்|
லம்போதரம் விஸாலாக்ஷம்
வந்தேஹம் கணநாயகம்||

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மருக்கொழுந்தை
தேன்நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

### பற்றின்மை

எந்தப் பொருளாயினும் என்றோ ஓர் நாள் ஒன்று நம்மை விட்டுப் போய்விடும் அல்லது நாம் அதைவிட்டு விடவேண்டியிருக்கும். அதே இடத்தில் பிரிவின்போது துன்பம் ஏற்படத்தான் செய்யும். ஒரு பொருளின் போது பிரியமுண்டென்ருல், அதைத் தொடர்ந்து பிரிவுமிருக்கவே செய்கிறது. மனம் ஒப்பி பொருளின் ஆசையிலிருந்து விடுபட்டுக் கொள்வதுவே வைராக்கியமாகும். மரத்தில் இருக்கும் மாங்காய், பிஞ்சு, காயாக இருக்கும் போது காம்பில் தண்ணீர் இருக்கிறது. ஆனுல் அதே மாங்காய் பழுத்து விட்டால் பழம் தானுகவே உதிர்ந்து விடுகிறது. அப்போது காம்பில் தண்ணீர் வருவதில்லை. காயாக இருந்த போது அதிலுள்ள கசப்பும் புளிப்பும் மாறி தித்திப்பு வந்ததும் பழம் தானுக உதிர்ந்து விடுகிறது. அதுபோலப் பற்றின்மைக்கு மனப்பக்குவம் உண்டாகி மனம் (கசிந்து) தித்தித்து விட்டால் அப்பிரிவில் வருத்தம் உண்டாவதில்லை. மனவைராக்கியம், பற்றின்மை இவை எல்லாம் மனப்பக்குவமடைவதற்கு மூலகாரணமாகும்.

## ஆவணித் திருநாள்

சதுர்த்தி, ஞாயிறு, மூலம் ஆகிய திதிவார நக்ஷத்திர விசேடங்கள் மூன்றும் பொருந்திய சிறப்பு ஆவணிமாதத்திற்குண்டு.

தேவர்கள் தேவன் சிந்தூர முகத்தவன், மூவர்கள் முத்தொழிற்கும் காரணன், மேவர மகிழ்வது விளம்பு நாமமுந் தாவறு விநாயக சதுர்த்திதினம் விநாயகப் பெருமான் சிந்தூரன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பதற்கு அவதரித்த புண்ணிய தினமாகும். இத்தினம் விரதமனுஷ்டிக்கும் பக்தர்களது

"அரும்பிய விடரெலா மறுக்கத் தக்கது
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது
பொரும்பகை வலிகளும் போக்கத் தக்கது
விரும்பிய பொருளெலாம் விளைக்கத் தக்கது"

என்றிருப்பதால் நாமும் விநாயகப் பெருமானது இச்சதுர்த்தி தினத்தில் அப்பெருமானை அர்ச்சித்து வழிபடுவோமாக" திருவாதவூரடிகளுக்காக நான்மறை அறங்களோங்கவும்; மேன்மை கொள்சைவ நீதி விளங்கவும் சைவத்தை நிலைநாட்டவும் புத்தரை வாதில் வென்று சைவத்தை நிலைநிறுத்தவும் திருவவதாரம் செய்த மணிவாசகருக்காக, அவரின், பாண்டியராசனுற்பட்ட துன்பத்தை நீக்கவும் திருவுளங்கொண்ட இறைவன் குதிரை

(5-ம் பக்கம் பார்க்க)

# விபவ வருஷ ஆவணி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 4கலை 54விகலை)

| தேதி ஆங் | தேதி தமி | நாக்ஷத்ர நேர பகல் 12-00 ம நி. செ | சூரியன் ☉ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | 9 39 29 | 3 29 39 | 5 7 21 | 11 16 59 | 4 12 17 | 1 9 58 | 2 14 4 | 8 2 24 | 10 21 23 | 8 3 31 | 8 14 1 |
| 17 | 2 | 9 43 25 | 4 0 37 | 5 19 12 | 17 8 | 14 4 | 10 5 | 14 59 | 2 22 | 21 20 | 3 30 | 14 0 |
| 18 | 3 | 9 47 22 | 1 34 | 6 1 10 | 17 15 | 15 49 | 10 12 | 15 54 | 2 21 | 21 17 | 3 29 | 13 59 |
| 19 | 4 | 9 51 18 | 2 32 | 6 13 19 | 17 22 | 17 33 | 10 18 | 16 50 | 2 20 | 21 14 | 3 28 | 13 58 |
| 20 | 5 | 9 55 15 | 3 30 | 6 25 45 | 17 28 | 19 16 | 10 25 | 17 46 | 2 19 | 21 11 | 3 27 | 13 57 |
| 21 | 6 | 9 59 12 | 4 27 | 7 8 30 | 17 33 | 20 57 | 10 31 | 18 42 | 2 18 | 21 8 | 3 27 | 13 56 |
| 22 | 7 | 10 3 8 | 5 25 | 7 21 39 | 17 37 | 22 36 | 10 38 | 19 40 | 2 17 | 21 5 | 3 26 | 13 55 |
| 23 | 8 | 10 7 5 | 6 23 | 8 5 15 | 17 40 | 24 14 | 10 44 | 20 37 | 2 16 | 21 2 | 3 25 | 13 55 |
| 24 | 9 | 10 11 1 | 7 21 | 8 19 19 | 17 43 | 25 51 | 10 50 | 21 35 | 2 16 | 20 59 | 3 25 | 13 54 |
| 25 | 10 | 10 14 58 | 8 19 | 9 3 48 | 17 45 | 27 27 | 10 56 | 22 34 | 2 15 | 20 56 | 3 24 | 13 53 |
| 26 | 11 | 10 18 54 | 9 17 | 9 18 39 | 17 46 | 4 29 1 | 11 1 | 23 32 | 2 15 | 20 53 | 3 23 | 13 52 |
| 27 | 12 | 10 22 51 | 10 15 | 10 3 45 | 17 46 | 5 0 34 | 11 7 | 24 32 | 2 14 | 20 50 | 3 23 | 13 52 |
| 28 | 13 | 10 26 47 | 11 12 | 10 18 58 | 17 45 | 2 5 | 11 12 | 25 31 | 2 14 | 20 46 | 3 22 | 13 51 |
| 29 | 14 | 10 30 44 | 12 10 | 11 4 7 | 17 43 | 3 35 | 11 17 | 26 31 | 2 14 | 20 43 | 3 22 | 13 50 |
| 30 | 15 | 10 34 41 | 13 8 | 11 19 3 | 17 41 | 5 4 | 11 22 | 27 32 | 2 14 | 20 40 | 3 22 | 13 50 |
| 31 | 16 | 10 38 37 | 4 14 6 | 0 3 41 | 11 17 38 | 5 6 31 | 1 11 27 | 2 28 32 | 8 2 14 | 10 20 37 | 8 3 21 | 8 13 49 |
| செப் 1988 1 | 17 | 10 42 34 | 4 15 4 | 0 17 54 | 11 17 34 | 5 7 57 | 1 11 31 | 2 29 34 | 8 2 14 | 10 20 34 | 8 3 21 | 8 13 48 |
| 2 | 18 | 10 46 30 | 16 2 | 1 1 42 | 17 29 | 9 21 | 11 36 | 3 0 35 | 2 14 | 20 31 | 3 21 | 13 48 |
| 3 | 19 | 10 50 27 | 17 0 | 1 15 4 | 17 23 | 10 44 | 11 40 | 1 37 | 2 14 | 20 28 | 3 21 | 13 47 |
| 4 | 20 | 10 54 23 | 17 59 | 1 28 2 | 17 16 | 12 6 | 11 44 | 2 39 | 2 15 | 20 25 | 3 21 | 13 47 |
| 5 | 21 | 10 58 20 | 18 57 | 2 10 41 | 17 9 | 13 26 | 11 48 | 3 41 | 2 15 | 20 22 | 3 21 | 13 46 |
| 6 | 22 | 11 2 17 | 19 55 | 2 23 2 | 17 0 | 14 45 | 11 52 | 4 44 | 2 16 | 20 18 | 3 21 | 13 46 |
| 7 | 23 | 11 6 13 | 20 53 | 3 5 11 | 16 51 | 16 2 | 11 55 | 5 47 | 2 17 | 20 14 | 3 21 | 13 45 |
| 8 | 24 | 11 10 10 | 21 51 | 3 17 9 | 16 41 | 17 17 | 11 59 | 6 51 | 2 17 | 20 11 | 3 21 | 13 45 |
| 9 | 25 | 11 14 6 | 22 50 | 3 29 1 | 16 31 | 18 31 | 12 3 | 7 54 | 2 18 | 20 8 | 3 21 | 13 45 |
| 10 | 26 | 11 18 3 | 23 48 | 4 10 49 | 16 20 | 19 43 | 12 5 | 8 58 | 2 19 | 20 5 | 3 21 | 13 44 |
| 11 | 27 | 11 21 59 | 24 46 | 4 22 36 | 16 8 | 20 53 | 12 7 | 10 2 | 2 20 | 20 2 | 3 21 | 13 44 |
| 12 | 28 | 11 25 56 | 25 45 | 5 4 24 | 15 55 | 22 1 | 12 10 | 11 7 | 2 21 | 19 59 | 3 22 | 13 44 |
| 13 | 29 | 11 29 52 | 26 43 | 5 16 15 | 15 42 | 23 7 | 12 12 | 12 11 | 2 23 | 19 56 | 3 22 | 13 44 |
| 14 | 30 | 11 33 49 | 27 42 | 5 28 12 | 15 28 | 24 10 | 12 15 | 13 16 | 2 24 | 19 53 | 3 22 | 13 44 |
| 15 | 31 | 11 37 45 | 4 28 40 | 6 10 17 | 11 15 13 | 5 25 12 | 1 12 17 | 3 14 22 | 8 2 26 | 10 19 50 | 8 3 23 | 8 13 43 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்களை இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆவணி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 05 நிமிஷம்)

| வாரம் | 6...05<br>7...05 | 7...05<br>8...05 | 8...05<br>9...05 | 9...05<br>10...05 | 10...05<br>11...05 | 11...05<br>12...05 | 12...05<br>1...05 | 1...05<br>2...05 | 2...05<br>3...05 | 3...05<br>4...05 | 4.. 05<br>5...05 | 5.. 05<br>6.. 05 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் சுபமா?

ஆவ 1 செவ் (16-8-88) சதுர்த்தி பி.இ. 4-13 வரை, உத்தரம் பகல் 10-53 வரை, அமிர்தசித்தம், சதுர்த்தி விரதம். வயற்செய்கைக்கு நன்று. ராகு 3-05—4-38

ஆவ 2 புத (17-8-88) பஞ்சமி முழுவதும், அத்தம் பகல் 1-48 வரை, கரிநாள், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 12-05—1-38

ஆவ 3 வியா (18-8-88) பஞ்சமி-சித்தம் காலை 6-23 வரை, சித்திரை - மரணம் மாலை 4-26 வரை, ஷஷ்டி விரதம். ராகு 1-35—3-07

ஆவ 4 வெள் (19-8-88) ஷஷ்டி காலை 8-04 வரை, சுவாதி மாலை 6-29 வரை, சித்தம். நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 10-35—12-07

ஆவ 5 சனி (20 8-88) ஸப்தமி காலை 9-07 வரை, விசாகம் மாலை 7-52 வரை, சித்தம், காலை 9-00 மணிக்குள் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-05—10-37

ஆவ 6 ஞாயி (21-8-88) அஷ்டமி காலை 9-25 வ. அனுஷம் இரவு 8-30 வரை. மரணம், அசுபதினம். ராகு 4-35—6-07

ஆவ 7 திங் (22-8-88) நவமி காலை 8-55 வரை, கேட்டை இரவு 8-20 வரை, சித்தம், அசுபதினம். ராகு 7-35—9-07

ஆவ 8 செவ் (23-8-88) தசமி காலை 7-37 வரை, மூலம் மாலை 7-24 வரை ஏகாதசி பி.இ. 5-35 வரை, அமிர்தசித்தம், ஆவணி மூலம், ஸ்மார்த்த ஏகாதசிவிரதம். வயற்செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-05—4-37

ஆவ 9 புத (24 8-88) துவாதசி பி.இ. 2-54 வரை, பூராடம் மாலை 5-47 வரை, அமிர்தம், கரிநாள், அசுபதினம். ராகு 12-05—1-37

ஆவ 10 வியா (25-8-88) திரயோதசி இரவு 11-44 வரை, உத்தராடம் பகல் 3-35 வரை, சித்தம், பிரதோஷவிரதம். நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 1-35—3-07

ஆவ 11 வெள் (26-8-88) சதுர்த்தசி இரவு 8-11 வரை, திருவோணம்-மரணம் பகல் 12 58 வ. ஆவணி ஓணம், வரலக்குமிவிரதம். பகல் 12-58ன் மேல் அவசிய கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 10-35—12-07

ஆவ 12 சனி (27-8-88) பூரணை மாலை 4-26 வரை, அவிட்டம் பகல் 10-06 வரை, சித்தாமிர்தம், பூரணை விரதம், நற்கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 9-05—10-37

ஆவ 13 ஞாயி (28-8-88) பிரதமை பகல் 12-40 வ. சதயம் காலை 7-08 வரை, பூரட்டாதி பி.இ. 4-16 வரை, அசுபதினம். ராகு 4-35—6-07

ஆவ 14 திங் (29-8-88) துவிதியை காலை 9-01 வ. திரிதியை பி.இ. 5-39 வரை, உத்தரட்டாதி பி.இ. 1-38 வரை, சித்தம், நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 7-35—3-07

ஆவ 15 செவ் (30 8-88) சதுர்த்தி பி.இ. 2-43 வரை, ரேவதி இரவு 11-25 வரை, அமிர்தசித்தம், வயற்செய்கைக்கு உகந்ததினம். ராகு 3-55—4-37

ஆவ 16 புத (31-8-88) பஞ்சமி இரவு 12-20 வரை, அசுவினி-மரணம் இரவு 9-43 வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 12-04—1-36

ஆவ 17 வியா (1-9-88) ஷஷ்டி இரவு 10-36 வரை, பரணி இரவு 8-40 வரை, மரணம் சுபதினமன்று. ராகு 1-34—3 06

ஆவ 18 வெள் (2 9-88) ஸப்தமி இரவு 9-35 வ. கார்த்திகை-சித்தம், இரவு 8-20 வரை, கார்த்திகை விரதம், அசுபதினம். ராகு 10-34—12-06

ஆவ 19 சனி (3-9 88) அஷ்டமி இரவு 9-18 வரை, ரோகிணி இரவு 8-43 வரை, சுபதினமன்று. ராகு 9 04—10-36

ஆவ 20 ஞாயி (4-9-88) நவமி-மரணம் இரவு 9 46 வரை, மிருகசீரிடம் இரவு 9-49 வரை, அசுபதினம். ராகு 4-34—6-06

ஆவ 21 திங் (5-9-88) தசமி இரவு 10-53 வரை, திருவாதிரை இரவு 11-34 வரை, சித்தாமிர்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 7-34—9-06

ஆவ 22 செவ் (6-9-88) ஏகாதசி பி.இ. 12-33 வ. புனர்பூசம் பி.இ. 1-50 வரை, சித்தம், ஸர்வ ஏகாதசிவிரதம், வயற்கருமங்கள் மேற்கொள்ள நன்று. ராகு 3 04—4-36

ஆவ 23 புத (7-9-88) துவாதசி பி.இ. 2-40 வ. பூசம் பி.இ. 4-32 வரை, சித்தம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 12-04—1-35

ஆவ 24 வியா (8-9 88) திரயோதசி பி.இ. 5-06 வரை, ஆயிலியம் முழுவதும் சித்தம், பிரதோஷ விரதம், அசுபதினம். ராகு 1-34—3-05

ஆவ 25 வெள் (9-9-88) சதுர்த்தசி முழுவதும் ஆயிலியம், காலை 7-30 வரை. மரணம், சுபதினமன்று. ராகு 10-34—12-05

ஆவ 26 சனி (10-9-88) சதுர்த்தசி காலை 7-42வ: மகம் பகல் 10-38 வரை, அமிர்தசித்தம், அமாவாசை விரதம், அசுபதினம். ராகு 9-04—10-35

ஆவ 27 ஞாயி (11-9-88) அமாவாசை பகல் 10-20 வரை, பூரம் பகல் 1-47 வரை, சித்தாமிர்தம், சுபதினமன்று. ராகு 4-34—6-05

ஆவ 28 திங் (12-9-88) பிரதமை பகல் 12-50 வ: உத்தரம் மாலை 4-52 வரை, சித்தம், கரிநாள் அவசியகருமங்கள் செய்யலாம். ராகு 7-34—9-05

ஆவ 29 செவ் (13-9-88) துவிதியை பகல் 8-18 வ. அத்தம் மாலை 7-45 வரை, சித்தம், வயல்தோட்டச் செய்கைக்கு நன்று: ராகு 3-04—4-35

ஆவ 30 புத (14-9-88) திரிதியை மாலை 5-25 வ. சித்திரை இரவு 10-21 வரை, சித்தம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 12-04—1-35

ஆவ 31 வியா (15-9-88) சதுர்த்தி மாலை 7-09 வ. சுவாதி பி.இ. 12-34 வரை, அமிர்தசித்தம், விநாயக சதுர்த்திவிரதம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 1-33—3-04

---

# மகர லக்ன ஆணும் சிங்க லக்னப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

இவ்விருவரின் முரண்பாடுகளுக்கும் காரணம் அவர்களுடைய எதிரிடையான உலகாயதமாகும். தேவைக்கதிகமான உடுப்புகளிலும் வீட்டுத் தளபாடங்களிலும் அதிக மோகம் சிங்ககாரிக்கு உண்டு. அதனல் வாழ்க்கையில் உயர்ந்த அந்தஸ்துக்களில் ஓர் அலாதி ஆசை. மகரகாரருக்கு இதெல்லாம் பிடிக்காது. அவர் சாதாரணச் சிக்கனப் பேர்வழி. எதிர்காலத்திற்குச் சேமிப்பதில் கண்ணும் கருத்துமானவர். சாதாரணமாக ஒரு சினிமாக் காட்சிக்குப் போவதே அவருக்கு பெருத்த முதலை மடக்குவதாக எண்ணம். ஏனென்றல் அவளுடன் சென்றல் எல்லாம் பெரிய எடுப்பாகவே இருக்க வேண்டும்.

நெருக்குவாரம் ஏற்பட்டால் இந்த இணைப்பை முறிப்பதற்கு சடுதியாகத் தூண்டப்பட்டு தானே தனியனுபிருக்க விரும்புவான். ஒரு நாட்காலை எழுந்ததும் கணவனைக் கானவில்லையே என்று திகிலடைவாள். அவள் பொலீசுக்கும், தன் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் இவர் மறைவை அறிவித்து விடுவாள். சில நாட்கள் செல்ல ஒன்றுமறியாதவள் போல திரும்பி வருவாள். இவள் இப்படி திகிலடைந்தாள் என்பதை விளக்க அவனல் முடியாது. சிங்ககாரி எல்லாம் நன்மைக்கே என்று எண்ணுவாள். மகரகாரனுக்கு வெளிச்சமான வாழ்க்கை ஒருக்காலும் தென்படாது. ஆதலால் இருவருக்கும் இணக்கம் ஏற்படாது. இந்த நிலையில் நகைச்சுவையே நலம் கொடுக்கும்.

அவள் ஒரு புதிய உடுப்பையோ அல்லது புதிய கொண்டையையே போட்டால் அவள் நல்ல அழகாயிருந்தாலும் அதை அவன் கவனிக்காமல் விட்டால் அவளுக்கு மனத்தாங்கல் உண்டாகும்.

அவள் ஒழிப்பு மறைப்பில்லாமல் வெளிப்படையாக இருந்தாலும் அவள் பாலியல்பை பாரதூரமாகக் கருதமாட்டாள். அவனும் வெளிப்படையாயிருந்தாலும் அவன் இவற்றைப் பாரதூரமாகக் கருதுவான். இவற்றுக்கு அவள் இவனுடைய கவனத்தை ஈர்க்காமல் விட்டால் காலம் செல்லச் செல்ல அவன் தன்னைத்தானே தளர்த்திக் கொள்வான். பாலியலில் அவள் கூடுதலாக ஈடுபடில் இன்னும் கூடுதலான தொந்தரவுகள் ஏற்படக்கூடும். ஏனெனில் மகரகாரன் எப்போதும் கட்டுப்பாடும் மட்டுப்படுத்தலையுமே விரும்புவான்.

ஒரு ஆட்டம்காணும் உறவுதான்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரராக அவதரித்து மதுரை மாநகரின் கண்ணே தோன்றியதினமே ஆவணி மூலநன்னாளாகும். இறைவனே எழுந்தருளி வந்து அருள்புரிந்து திருவிளையாடல் நிகழ்த்திய இத்தினத்தில் இறைவனை வணங்கி அவனருள் பெற்றுய்வோமாக. விண்ணுறு சுடராய், விளங்கிய விளக்காய், மண்ணுறு மணியாய் விளங்கும் சூரியதேவன் சிம்மாசனத்தில் பாணுபாரத்தில் மக்களுக்கு அருள் சுரப்பவனுக அமைகிறன். பிரதி ஞாயிறு வாரமும் சூரிய வாரமாயிருந்த போதிலும் ஆட்சி பெறும் சிம்மராசியில் (ஆவணி மாதத்தில்) வழிபாட்டில் பலனளிக்கும் பிரத்யக்ஷ தெய்வமாகிறன். எனவே இப்பகவானை செவ்வரத்தை, செந்தாமரை முதலிய சிவந்த பூக்களால் அர்ச்சித்தும் சர்க்கரைப் பொங்கலமுது படைத்தும் பிணியகலப் பிரார்த்தித்தும் வழிபடுவோமாக!

## உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### விபவ ஸூ ஆவணி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (16-8-88 முதல் 15-9-88 வரை)

| இங் | தமி | வாரம் | சிங்கம் | | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | கடகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆக | ஆவ | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி வரை (பி.இ) |
| 16 | 1 | செவ் | 6 8 | 8 9 | 10 7 | 12 11 | 2 22 | 4 30 | 6 26 | 8 11 | 9 53 | 11 43 | 1 45 | 3 56 | 6 4 |
| 17 | 2 | புதன் | 6 4 | 8 5 | 10 3 | 12 7 | 2 18 | 4 26 | 6 22 | 8 7 | 9 49 | 11 39 | 1 41 | 3 52 | 6 0 |
| 18 | 3 | வியா | 6 1 | 8 1 | 9 59 | 12 3 | 2 14 | 4 22 | 6 18 | 8 3 | 9 45 | 11 35 | 1 37 | 3 48 | 5 56 |
| 19 | 4 | வெள் | 5 57 | 7 57 | 9 55 | 11 59 | 2 10 | 4 18 | 6 14 | 7 59 | 9 41 | 11 31 | 1 33 | 3 44 | 5 52 |
| 20 | 5 | சனி | 5 53 | 7 54 | 9 52 | 11 56 | 2 7 | 4 15 | 6 11 | 7 56 | 9 38 | 11 28 | 1 30 | 3 41 | 5 49 |
| 21 | 6 | ஞாயி | 5 50 | 7 50 | 9 48 | 11 52 | 2 3 | 4 11 | 6 7 | 7 52 | 9 34 | 11 24 | 1 26 | 3 37 | 5 45 |
| 22 | 7 | திங் | 5 46 | 7 46 | 9 44 | 11 48 | 1 59 | 4 7 | 6 3 | 7 48 | 9 30 | 11 20 | 1 22 | 3 33 | 5 41 |
| 23 | 8 | செவ் | 5 42 | 7 42 | 9 40 | 11 44 | 1 55 | 4 3 | 5 59 | 7 44 | 9 26 | 11 16 | 1 18 | 3 29 | 5 37 |
| 24 | 9 | புதன் | 5 38 | 7 38 | 9 36 | 11 40 | 1 51 | 3 59 | 5 55 | 7 40 | 9 22 | 11 12 | 1 14 | 3 25 | 5 33 |
| 25 | 10 | வியா | 5 34 | 7 34 | 9 32 | 11 36 | 1 47 | 3 55 | 5 51 | 7 36 | 9 18 | 11 8 | 1 10 | 3 21 | 5 29 |
| 26 | 11 | வெள் | 5 30 | 7 30 | 9 28 | 11 32 | 1 43 | 3 51 | 5 47 | 7 32 | 9 14 | 11 4 | 1 6 | 3 17 | 5 25 |
| 27 | 12 | சனி | 5 26 | 7 26 | 9 24 | 11 28 | 1 39 | 3 47 | 5 43 | 7 28 | 9 10 | 11 0 | 1 2 | 3 13 | 5 21 |
| 28 | 13 | ஞாயி | 5 22 | 7 23 | 9 21 | 11 25 | 1 36 | 3 44 | 5 40 | 7 25 | 9 7 | 10 57 | 12 59 | 3 10 | 5 18 |
| 29 | 14 | திங் | 5 19 | 7 19 | 9 17 | 11 21 | 1 32 | 3 40 | 5 36 | 7 21 | 9 3 | 10 53 | 12 55 | 3 6 | 5 14 |
| 30 | 15 | செவ் | 5 15 | 7 15 | 9 13 | 11 17 | 1 28 | 3 36 | 5 32 | 7 17 | 8 59 | 10 49 | 12 51 | 3 2 | 5 10 |
| 31 | 16 | புதன் | 5 11 | 7 10 | 9 8 | 11 12 | 1 23 | 3 31 | 5 27 | 7 12 | 8 54 | 10 45 | 12 46 | 2 57 | 5 5 |
| செப் | | | | | | | | | | | | | | | |
| 1 | 17 | வியா | 5 6 | 7 6 | 9 4 | 11 8 | 1 19 | 3 27 | 5 23 | 7 8 | 8 50 | 10 41 | 12 42 | 2 53 | 5 1 |
| 2 | 18 | வெள் | 5 2 | 7 2 | 9 0 | 11 4 | 1 15 | 3 23 | 5 19 | 7 4 | 8 46 | 10 37 | 12 38 | 2 49 | 4 57 |
| 3 | 19 | சனி | 4 58 | 6 58 | 8 56 | 11 0 | 1 11 | 3 19 | 5 15 | 7 0 | 8 42 | 10 33 | 12 34 | 2 45 | 4 53 |
| 4 | 20 | ஞாயி | 4 54 | 6 54 | 8 52 | 10 56 | 1 7 | 3 15 | 5 11 | 6 56 | 8 38 | 10 29 | 12 30 | 2 41 | 4 49 |
| 5 | 21 | திங் | 4 50 | 6 50 | 8 48 | 10 52 | 1 3 | 3 11 | 5 7 | 6 52 | 8 34 | 10 25 | 12 26 | 2 37 | 4 45 |
| 6 | 22 | செவ் | 4 46 | 6 46 | 8 44 | 10 48 | 12 59 | 3 7 | 5 3 | 6 48 | 8 30 | 10 21 | 12 22 | 2 33 | 4 41 |
| 7 | 23 | புதன் | 4 42 | 6 42 | 8 40 | 10 44 | 12 55 | 3 3 | 4 59 | 6 44 | 8 26 | 10 17 | 12 18 | 2 29 | 4 37 |
| 8 | 24 | வியா | 4 38 | 6 39 | 8 37 | 10 41 | 12 52 | 3 0 | 4 56 | 6 41 | 8 23 | 10 14 | 12 15 | 2 26 | 4 34 |
| 9 | 25 | வெள் | 4 35 | 6 35 | 8 33 | 10 37 | 12 48 | 2 56 | 4 52 | 6 37 | 8 19 | 10 10 | 12 11 | 2 22 | 4 30 |
| 10 | 26 | சனி | 4 31 | 6 31 | 8 29 | 10 33 | 12 44 | 2 52 | 4 48 | 6 33 | 8 15 | 10 6 | 12 7 | 2 18 | 4 26 |
| 11 | 27 | ஞாயி | 4 27 | 6 27 | 8 25 | 10 29 | 12 40 | 2 48 | 4 44 | 6 29 | 8 11 | 10 2 | 12 3 | 2 14 | 4 22 |
| 12 | 28 | திங் | 4 23 | 6 23 | 8 21 | 10 25 | 12 36 | 2 44 | 4 40 | 6 25 | 8 7 | 9 58 | 11 59 | 2 10 | 4 18 |
| 13 | 29 | செவ் | 4 19 | 6 19 | 8 17 | 10 21 | 12 32 | 2 40 | 4 36 | 6 21 | 8 3 | 9 54 | 11 55 | 2 6 | 4 14 |
| 14 | 30 | புதன் | 4 15 | 6 14 | 8 12 | 10 16 | 12 27 | 2 35 | 4 31 | 6 16 | 7 58 | 9 49 | 11 50 | 2 1 | 4 9 |
| 15 | 31 | வியா | 4 10 | 6 10 | 8 8 | 10 12 | 12 23 | 2 31 | 4 27 | 6 12 | 7 54 | 9 45 | 11 46 | 1 57 | 4 5 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆவணி 31 உ (15-9-88) பகல் 9-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-08—10-12)துலா லக்னம்

# ஆவணி மாதக் கிரகநிலை

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | செவ் | | குரு | சுக் | |
| கும்பம் | ராகு | ஆவணி மாதக் கிரக நிலை | | | கடகம் |
| மகரம் | | | | சூ, புத கேது | சிங்கம் |
| | சனி யுரே நெப்டி | | | | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

11 உ(26-8-88) இரவு 8-49 கன்னி - புத
17உ (1-9-88) பகல் 3-48க்கு கடக - சுக்
12உ செவ்வாய் வக்கிராரம்பம்.
1உ புதன் உதயம்.
16உ சனி வக்கிரத்தியாகம்.
23உ யுரேனஸ் வக்கிரத்தியாகம்.

இம்மாதம் நெப்டியூன் வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆவ | 2உ | (17-8-88) | பி.இ | 3-11 | முதல் | துலாம் |
| | 5உ | (20-8-88) | பகல் | 3-35 | ,, | விருச்சிகம் |
| | 7உ | (22-8-88) | இரவு | 8-19 | ,, | தனுசு |
| | 9உ | (24-8-88) | இரவு | 11-16 | ,, | மகரம் |
| | 11உ | (26-8-88) | இரவு | 11-33 | ,, | கும்பம் |
| | 13உ | (28-8-88) | இரவு | 10-58 | ,, | மீனம் |
| | 15உ | (30-8-88) | இரவு | 11-24 | ,, | மேடம் |
| | 17உ | (1-9-88) | பி.இ. | 2-31 | ,, | இடபம் |
| | 20உ | (4-9-88) | காலை | 9-11 | ,, | மிதுனம் |
| | 22உ | (6-9-88) | மாலை | 7-13 | ,, | கடகம் |
| | 25உ | (9-9-88) | காலை | 7-29 | ,, | சிங்கம் |
| | 27உ | (11-9-88) | இரவு | 8-33 | ,, | கன்னி |
| | 30உ | (14-9-88) | காலை | 9-05 | ,, | துலாம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆவணி மீ 31 உ பகல் 9-30 மணிக்கு துலா லக்னம் என அறிந்து கொண்ட பின் 'துலாம், என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது 'யுத்தராசியான' விருச்சிகலக்னம் உதயமாகிறது. லக்கினாதிபதி திரிகோணம் பெறுவதும் லக்கினத்தைக் குரு திருஷ்டிப்பதும் சிறிது அமைதியையும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடம்பெறுவதையும் காட்டுகிறது. 10ல் சூரியன் பெலமடைவதால் அரசாங்க நடவடிக்கைகள் வெற்றியளிக்கும். சனி, செவ்வாயைச் சதுரப்பார்வையால் நோக்குவதால் அசம்பாவிதங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும்.

# ஆவணி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

16-8-88 — 15-9-88

| | | |
|---|---|---|
| சூரியன்: | 16-8-88 | பகல் 2-17 சிங்கராசிப் பிரவேசம் |
| | 16-8-88 | உதயம் காலை 6-05 |
| | 16-8-88 | உச்சம் பகல் 12-14 |
| | 16-8-88 | அஸ்தமனம் மாலை 6-24 |
| | 31-8-88 | உதயம் காலை 6-04 |
| | 31-8-88 | உச்சம் பகல் 12-10 |
| | 31-8-88 | அஸ்தமனம் மாலை 6-16 |
| சந்திரன்: | 27-8-88 | பூரணை மாலை 4-26 வரை |
| | 11-9-88 | அமாவாசை பகல் 10-20 |
| | 12-9-88 | சந்திரதரிசனம் |

## கிரகங்கள்

புதன்:- சென்ற சில நாட்களாக அஸ்தமனமாகவிருந்த இக்கிரகம் 16-8-88 இல் மேற்கிலே உதயமாகும். மாதமுடிவில் அஸ்தமனத்தின் பின் சூரியனிலிருந்து வானில் கூடிய தூரம் விலகி மேற்கு வானில் 27பாகைஉயரத்தில் காணப்படும். 26-8-88 இல் கன்னிராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் 45 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் 22-8-88 இல் சூரியனிலிருந்து ஆகக் கூடிய தூரம் பிரிந்து 46பாகை உயரத்திற் காணப்படும். 31-8-88 இற் கடகராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் மேற்கு வானில் 48 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம், மாதமுடிவில் மேற்கு வானிற் 17 பாகை உயரத்திற் காணப்படும். 26-8-88 தொடக்கம் வக்கிரகதியிற் செல்லும். இம்மாதம் முழுவதும் மீனராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

வியாழன்:- மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் உச்சிக்கு 11 பாகை கிழக்கிற் காணப்பட்ட இக்கிரகம், மாதமுடிவில் உச்சிக்கு 16 பாகை மேற்கே சரிந்து காணப்படும். இம்மாதம் முழுவதும் இடபராசியிற் சஞ்சரிக்கின்றது.

சனி:- மாதாரம்பத்திற் சூரிய அஸ்தமனத்தின் பின் கிழக்குவானில் 56 பாகை உயரத்திற் தோன்றும் இக்கிரகம் மாதமுடிவில், உச்சிக்கு கிழக்கில் 3 பாகை சரிந்து காணப்படும். சில மாதகாலமாக வக்கிரகதியிற் சென்று கொண்டிருந்த இக்கிரகம் 30-8-88 தொடக்கம் நேர்கதியிற் செல்லுகிறது. இம்மாதம் முழுவதும் தனுராசியிற் சஞ்சரிக்கும்.

யூரேனஸ்:- வருடாதியாக வக்கிரகதியிற் சென்றுகொண்டிருந்த இக்கிரகம் 7-9-88 இல் வக்கிரகதி நீங்கி நேர்கதியிற் செல்லத் தொடங்கும். தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

நெப்டியூன்:- வக்கிரகதியிற் தனுராசியிற் சஞ்சரிக்கின்றது.

புளூட்டோ:- துலாராசியிற் சஞ்சரிக்கின்றது.

## சமாகமங்கள்

21-8-88 முன்னிரவில் சந்திரனால் கேட்டை நட்சத்திரம் ஒரு பக்கமாக மறைக்கப்படும்.

22-8-88 நள்ளிரவில் சந்திரனிற்கு சனி 6°.

27-8-88 இரவு பார்சுவ சந்திர கிரகணம். (இலங்கை இந்தியாவில் தோற்றாது) மலேசியா சிங்கப்பூரில் கிரகணம் பற்றியபடியே சந்திரன் உதயமாகும். 8-00 மணியளவில் கிரகணம் நீங்கும்.


29-8-88 பின்னிரவில் சந்திரனுக்கு தெற்கில் செவ்வாய் 8 பாகை.

2-9-88 நள்ளிரவில் சந்திரனிற்கு தெற்கு வியாழன் 6 பாகை. சந்திரோதயத்தின் பின் அவதானிக்கவும்.

7-9-88 காலையில் சந்திரனிற்குத் தெற்கு சுக்கிரன் 5½ பாகை. உதயம் முன் அவதானிக்கவும்.

11-9-88 முற்பகலில் கங்கண சூரியகிரகணம். இது இலங்கை தென்னிந்தியா மலேசியா சிங்கப்பூரிற் பார்சுவ சூரியகிரகணமாகத் தோற்றும். யாழ்ப்பாணத்தில் காலை மணி 7-24 — 10-15 மணி வரை அவதானிக்கலாம். சூரியனின் 6/10 பங்கு மறைக்கப்படும்.

13-9-88 முன்னிரவு 8½ மணியளவில் சந்திரனால் புதன் மறைக்கப்படும். சூரிய அஸ்தமனம் தொடக்கம் இதனை அவதானிக்கவும்.




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**
**16-8-88 முதல் 15-9-88 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 5ல் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். இவர்களின் உடல் நலம் பெரும் பாலும் சீராகவே இருக்கும். குடும்ப சுகம் — பொருள் வருமானம் என்பன சிறப்பாக முன்னேற்றமடையும். பெரியவர்கள் - உறவினர்கள் முதலியோரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். இராசாங்க உதவிகள் - முன் தடைப்பட்டிருந்த காரியங்கள் சித்தியடைதல் - வீட்டில் சுப சந்தோஷமான கொண்டாட்டங்கள் முதலியனவும் நிகழும் சாத்தியக்கூறுகள் ஏற்படும். சூரியன் தானபலம் குன்றுவதால் புத்திரர் கவலை முதலியனவும் நிகழலாம்.

குடும்பத்தில் மனநிறைவு பெரும்பாலும் ஏற்படும். கணவன் மனைவி நல்லுறவும் - குடும்ப வருமானமும் சிறக்கும். குரு முதலிய பெரியவர்கள்- உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். எனினும் சிலருக்குப் புத்திரர் துன்பங்களும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் படிப்படியாக மந்த நிலையடையும். ஆனால் மாதக் கடைசியில் விறுவிறுப்படையும். வாடிக்கையாளரின் வரவும் கூடும் பழைய பாக்கிக் கடன்களும் கைக்குக் கிடைக்கும். முதலீடுகள் லாபம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்ச்சி - பதவி மாற்றம் முதலியனவும் கிடைக்கும் உடன் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மனநிறைவான வருமானம் முதலியனவும் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் கூடிக்கொண்டே போகும். என்றாலும் கணிசமான விளைவும் கிடைப்பதால் நட்டமும் ஏற்பட இடமில்லை. விவசாயப் பண்ணைகளிலும் கூலிகளின்


ஒத்துழைப்பும் கிடைக்கும். நல்ல சந்ததை வாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் ஓரளவு கிடைக்கும். வருமானமும் முன்னேற்றம் காணும். பெரும்பாலும் தொழிலாளர் மத்தியில் அமைதியான - வாழ்வு ஏற்படும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும், கணித, விஞ்ஞானத்துறை - மாணவர்கள் சிறப்பாக முன்னேற்றம் பெறுவர். ஆசிரியர் - மாணவர் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுதலால் பரீட்சை முடிவுகளும் மனநிறைவாக அமையும்.

பெண்களுக்கு மனநிறைவான மாதம். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் வெற்றிபெறும். கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் குடும்பப் பெண்களுக்கு பெருமகிழ்ச்சியைத் தரும். வீட்டில் மங்கள கொண்டாட்டங்கள் கூட நிகழும் சாத்தியம் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள் ;- ஆக.22இ,23,24,27,28,31.
செ.1,2அ.கா,4பக,5,6பக,
துரதிஷ்ட நாட்கள்:- ஆக.16,17,20பி.ப,21,22பக
செ.12,13,14மு.ப.




கார்த்திகை 2 3,4 ரோகிணி மிருகசீரிடம் 1,2-ம் கால்

இந்த ராசியினருக்குச் சூரியபகவான் 4ல்ரஜஸ மூர்த்தியாக வலம் வருகிறார். சூரியன் மூர்த்தி பலம் குன்றுவதால் நன்மை தீமை கலந்த பலன்களே பெரும் பாலும் நிகழும். பொதுவாக இவர்களின் உடல் நலம் அடிக்கடி பாதிப்படையும். எந்த முயற்சிகளிலும் தடைதாமதங்கள் - அலைச்சல் - பிரயாசை மிகுதியாலேயே பலன் பெறுவார்கள். பொருள் வருமானத்திலும் செலவுகள் அதிகரிப்பால் கடன் பயமும் இவர்களுக்கு ஏற்படும். இராசாங்க துன்பம், சிறைப்பயம், விபத்துக்கள் அவமிருத்துக்களும் சிலருக்கு ஏற்படலாம். தசா புக்தி அந்தரபலம் உடையவர்கள் அதிகம் பாதிப்படைய மாட்டார்கள்.

குடும்பத்தவர்களுக்குப் பலப் பல சோதனைகள் ஏற்படும். குடும்ப சுகவீனம் அடிக்கடி ஏற்படும். இனபந்துக்களின் பகை விரோதங்களும் வீண் செலவுகளும் இவர்களின் வாழ்க்கையில் துன்பம் தரும். புத்திரர் உதவிகளும் கிடைப்பதரிதே.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் எதிர்பார்த்த லாபம் தராது. முதலீடுகளின் வருமானங்களும் குறைவுபடும், புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. நிதிநிலை குறைவு படும். எதிலும் முன் எச்சரிக்கை நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தாக்கங்கள் அகதிரிக்கும். பதவி உயர்ச்சி முதலியன கிடைக்கும் சாத்தியமும் ஏற்படாது. சிலருக்கு கஷ்டப் பிரதேச இடமாற்றங்கள் கூடக் கிடைக்கும். வருமானத்திலும் செலவுகள் கூடும்.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் பயிரழிவே தொடரும். விளைவும் குன்றும். கூலியாட்களும் பிரச்சனைகளை கொடுப்பர். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும்.

தொழிலாளர் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும். தொழில் பிணக்குகள் - வேலைநிறுத்தம் முதலியவற்றால் பெரிதும் பாதிப்படைவர். தினச்சம்பள வேலை செய்வோரின் நாளாந்த சீவியமும் கஷ்டம் தரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கலைத்துறை- இரசாயனத்துறை மாணவர் கல்வித் தேர்ச்சி குறிப்பிடக் கூடிய அளவில் முன்னேற்றம் பெறும்; பரீட்சை முடிவுகளும் திருப்தியாக அமையும்.

பெண்களுக்கு அட்டமத்துச் சனியும் சென்ம குருவும் தொடருவதால் எதிர்பார்ப்புகளில் சிக்கல்களும் தடைகளுமே பெரும் பாலும் ஏற்படும். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகளிலும் இழுபறி நிலையே தொடரும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக.16,17,25,26,29,30
செப். 2காலை,3,4கா,6இர,7
துரதிஷ்ட நாட்கள்:-ஆக.18,19.20மு.ப,22இர23
செப்.1,2அதிகாலை,14பிப,15




மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3

இவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 3ல் லோகமூர்த்தியாக வலம் வருதலின் நற்பலன்

களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பிரதான கிரகங்களான குரு- சனி- செவ்வாய் ஆகியவர்களின் கோசாரசஞ்சாரமும் பலமற்று இருப்பதும் கவனிக்கப்படவேண்டும் - பொதுவாகத் தேகசுகம் குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிப்படையும். நண்பர்கள் - உறவினர் பகை விரோதங்கள்- காரியத்தடை பொருள் நட்டம் - வருமானப் பற்றுக்குறைவு - வீண்செலவு - எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் - இழப்புக்கள் - புத்திரர் கவலை முதலானவையும் நிகழக் கூடும் - சூரியன் தான பெலம் பெறுவதால் அற்பசுகம் - அற்ப பொருள் வரவு - இராசாங்க உதவிகள் முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தின் பொருள் வருமானம் பெரிதும் குறையும். குடும்பத்தில் கருத்து முரண்பாடுகளும் சச்சரவுகளும் பிணிபீடைகளும் அடிக்கடி ஏற்படவும் கூடும். பெரியவர்கள் - உறவினர்கள் - புத்திரர் முதலியவர்களின் உதவிகளுக்குப் பதில் உபத்திரபங்களே அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையை அடைந்துவரும். மாத ஆரம்பத்தில் நிதி நிலையிலும் தாக்கம் ஏற்படும். 1-9-88 ன் மேல் புதன் வலுப்பெறுவதால் முதலீடுகள் லாபம் தரத் தொடங்கும். நிதி வசதிகளும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பர். சக உத்தியோகத்தர்களின் உதவிகளும் ஒத்தாசைகளும் குன்றும். வேலைப்பளு அதிகரிப்பதுடன் அநாவசிய வீண் செலவுகளும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிரழிவுகளால் விளைச்சல் குறையும். விவசாயப் பண்ணைகளிலும் பெரும்பாலும் நட்டம் ஏற்படவே செய்யும். விளைவு உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதிலும் சிக்கல்கள் ஏற்படும்.

தொழிலாளர் மத்தியில் கருத்து முரண்பாடுகளும் சச்சரவுகளும் அடிக்கடி ஏற்படும். வேலை நிறுத்தம் வேலை இழப்பு முதலியவற்றால் இவர்களின் நாளாந்தசீவியத்துக்குமே கஷ்டம் ஏற்படும்.

மாணவர் கல்வித் தடைக் காரணிகள் இடைக்கிடை ஏற்படுவதால் முன்னேற்றம் சிறிது பாதிக்கவே செய்யும். ஆசிரியர், மாணவர் கருத்து வேறுபாடுகளும் தோன்றி மறையும். சுயமுயற்சியால் பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெறமுடியும்.

பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறுவது கடினம். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்பு கிடைத்தாலே போதும் என்ற நிலை தொடரும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக.18,19,20மு.ப 27,28,31
செப்.1,2 அ.கா.4 பக,5,6பக
துரதிஷ்ட நாட்கள்:-ஆக.20பி.ப,21,22பக,25,26
செப்.2கா,3,4காலை



# கடகம்

புனர்பூசம் 4-ம்கால், பூசம், ஆயிலியம்

கடகராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 2ல் தாம்பர மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. தேகசுகம் பெரும்பாலும் பாதிப்படையும். பொருள் வருமானமும் குறையும், எந்த முயற்சிகளிலும் அலைச்சல், தடை தாமதங்கள் ஏற்படும். இனசனம் — நண்பர்களுடன் பகை - விரோதங்களும் ஏற்படலாம். குருபகவானின் சுப கோசாரசஞ்சாரம் நிகழுவதால் எதனையும் சமாளித்து காரிய சித்தியும் பெறுவர். குரு முதலிய பெரியவர்களின் உதவிகளும் பெறுவர். வீட்டில் மங்கள காரியங்களும் நிகழக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளும் ஏற்படும்.

குடும்பத்தின் வருமானம் குறைந்தாலும் கணவன் மனைவி உறவு சீராகவே இருக்கும். குடும்பப் பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். தூரதேசத்தில் அல்லது காணமல் போனவர்கள் பற்றிய சுப செய்திகள் வரவுகள் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். இயந்திரம், எண்ணெய் தானிய வியாபாரிகள் எதிர்பாராத முன்னேற்றமும் நயமும் பெறுவர். வங்கி - நிதி வசதிகளும் கிடைக்கும். முதலீடுகளாலும் லாபம் கிட்டும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லைகள் கூடிக்கொண்டே போகும். பதவி உயர்ச்சி முதலியன கிடைப்பதும் அரிது. உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வேலைப்பழுவும் கூடும்.

விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் கணிசமான அளவு கூடும். விவசாயப் பண்ணைகளிலும் எதிர்பார்த்த நயம் கிடைக்கும். எனினும் விளைச்சல்களைச் சந்தைப் படுத்துவதில் இராசாங்க அல்லது தரகர்களின் தலையீடுகளால் சிரமங்களும் ஏற்படும்.

தொழிலாளர்கள் நல்ல வருமானம் பெறுவர். வேலை வசதிகளும் பெறுவர், நாள்சம்பளத் தொழிலாளிகளுக்கும் சீவனத்துக்குப் போதிய வருமானம் கிடைக்கும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி வளர்ச்சி தொடரும். கணித-விஞ்ஞானத்துறை மாணவர் தொடர்ந்தும் நன்மை பெறுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படும்.

பெண்களுக்கு மனம் சந்தோஷப் படக் கூடிய மாதம். குடும்பப் பெண்களுக்குக் கணவர்மாரின் அன்பும் நல்லமுறையில் கிடைக்கும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் நிறைவு காணக் கூடியதாய் இருக்கும்.

அதிஷ்ட நாட்கள்;- ஆக.16'17,20பி.ப,21,22பக
செப்.2கா,3,4கா,6இர,7கா

துரதிஷ்ட நாட்கள்:- ஆக22இர,23,24,27,28
செப்.4பக,5'6பக



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் ஜென்மத்தில் (1ல்) ரஜஸமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் பெறாமையால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். தேகசுகம், குடும்பசுகம் என்பன இடைக்கிடை பாதிப்படையும். பொருள் வருமானமும் வீழ்ச்சியுறும். உறவினர் நண்பர்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும். இராசாங்க விரோதம், கருத்து மோதல்கள், வியாச்சிய பயம் தானப் பிரஷ்டம் முதலானவையும் சிலருக்கு நிகழும். குமரேசர் சதகத்தில் "சார்ந்த சன்மச் சூரியனின்' கோசார சஞ்சாரத்தைப் பற்றிச் சொல்லி இருப்பதையும் காணலாம். எப்போதும் எல்லாம் மனம்போல் நிகழாதுதானே!

குடும்பத்தின் வருமானம் வீழ்ச்சியுறும். குடும்பத்தில் பிணி-பீடைகள் கருத்து வேறுபாடுகள்-சச்சரவுகள் அடிக்கடி ஏற்பட்டு மன அமைதியைக் குறைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். பழைய நிலுவைகளை அறவிடுவதிலும் கஷ்டமே! நிதிநிலையிலும் பாதிப்புகள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நெருக்குதல்கள் குறைந்தாலும் வேலைப்பழு கூடிக் கொண்டே போகும். வேலைசம்பந்தமான இடமாற்றங்கள்-பதவி மாற்றங்கள் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். விளைச்சலும் குறைவுறும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் குறையவே செய்யும், கடன்பயமே தொடரும்.

தொழிலாளர் மத்தியில் பலப்பல பிரச்சனைகள் உருவாகிவரும். வேலைநிறுத்தம்-வேலைநீக்கம் வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடையாமை முதலியனவும் ஏற்படும்.

மாணவர் கல்வித்தடைக் காரணிகளே வலுப்பெறுதலால் மாணவர் மத்தியில் அமைதிக்குறைவும் விரக்தியும் தோன்றும். ஆசிரியர் - மாணவருக்கிடையில் கருத்து வேறுபாடுகளும் கூடும்.

பெண்களுக்கு 'நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று' ஆக எல்லாம் எதிர்மாறாக நிகழுதலால் துன்பம் தொடரும். விவாக முயற்சிகளும் இழுபறியாகவே இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 18,19,20மு.ப. 22இரவு.
செப். 1,2அ.கா.4பக.5,6பக.

துரதிஷ்டநாட்கள். ஆக. 25,26,29,30
செப். 6இர.7,8,9கா.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை, 1, 2 கால்

இந்த இராசிக்காரருக்குச் சூரியபகவான் இந்தமாதம் 12ல் விரையத்தில் சுவர்ண மூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் தானபெலம் பெறாவிட்டாலும் மூர்த்திபலம் பெறுவதும் குருவின் 5-ம் திருஷ்டி பெறுவதும் நன்மையாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் பெறுவர்: இராசாங்க உதவிகள்-பெரியவர்களின் உதவிகள் முதலியனவும் கிடைக்கும். வீட்டில் சுபமங்களக் கொண்டாட்டங்கள் கூட நிகழக்கூடிய சாத்தியங்களும் உண்டாகும். எனினும் எதிர்பாராத திடீர்ச் செலவினங்களும், உறவினர் அல்லது குடும்பத்தில் துன்பங்களும் இடைக்கிடை ஏற்படவும் செய்யும்.

குடும்பத்தலைவர்களுக்கு மனநிறைவான மாதம். எனினும் செவ்வாய் 7-ல் இருத்தலின் பிணி-பீடைகள்—விபத்துக்கள் குடும்பத்தில் நிகழவும் கூடும். புத்திரர் உதவிகளும் பெறுவர்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் குறையும். வியாபாரமும் பார்வைக்குச் சுறுசுறுப்பாக அமைந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைப்பதும் அரிதே

உத்தியோகத்தர்களுக்கு மன நிறைவான மாதம். பதவியுயர்வு-பதவி உறுதிப்படுத்துதல் முதலானவையும் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுகளும் சகஉத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் ஒருங்கே கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் விளைச்சலும் கணிசமானவரையில் அதிகரிக்கும். அதனால் லாபமில்லாவிட்டாலும் நட்டம் வரமாட்டாது. கூலியாட்கள் உதவி கிடைக்கும்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவர். நாளாந்தச் சம்பளம் பெறுபவர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும். தொழில் பிணக்குகளும் சமரசமாகத் தீரும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் இந்தமாதமும் தொடரும். வர்த்தக-கலைத்துறை மாணவர் சிறப்புச் சித்திகளும் பெறுவர். புலமைப் பரிசில்கள் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பும் கிடைக்கும்.

பெண்களுக்கு இந்த மாதத்தில் எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவுபெறக் கூடியதாய் அமையும். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகள் மன நிறைவுடன் கைகூடும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 16,17,20பி.ப.21,22பக. செப். 2கா:3,4கா,6இர.7,8,9.

துரதிஷ்டநாட்கள்: ஆக. 27,28,31 செப். 1,2அ.கா.9பக. 10,11




சித்திரை 3,4சுவாதி விசாகம் 1,2,3

இவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 11ல் லோகமூர்த்தியாக வலம் வருகின்றார், சூரியன் தான பலம் பெற்றாலும் மூர்த்தி பல மின்மையால் நன்மை பெற முடியாது. சனி, செவ்வாய் இவர்களின் கோசாரசஞ்சார பலம் இருப்பது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல் நலம் இடைக்கிடை குன்றும். இராசாங்க தொல்லைகள்- இனசன பந்துக்கள் தொல்லைகள்- பகை விரோதங்கள் முதலியனவும் நிகழும். அந்நியர் உதவி - அந்நிய நாட்டுப் பொருள் வரவு - மேற்கு தென்மேற்குத் திக்கில் அனுகூலம் முதலானவை கிடைப்பினும் வீண் செலவும் சிரமங்களும் ஏற்படவே செய்யும். குரு பகவானின் துர்க்கோசா சஞ்சாரத்தால் விபத்துக்கள் - சத்திர சிகிச்சைப் பயமும் சிலருக்கு ஏற்படும்.

குடும்பத்தில் கணவன் மனைவி ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் வளரும். குடும்ப வருமானமும் போதியவரை கூடும். ஆனால் இன சன பந்துக்கள் புத்திரர் முதலான உறவினர் துன்பங்கள் கஷ்டம் தரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு முன்னேற்றம் காணும். வங்கி நிதிக் கையிருப்பு திருப்தி தரமாட்டாது. பழைய பாக்கிகளை அறவிடுவதிலும் கஷ்டங்கள் உண்டு. புதிய முதலீடுகளை தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கள் பாடு திரிசங்கு சுவர்க்கம் போல் அமையும். மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் கூட இடைக்கிடை ஏற்படும். வேலை சுமக்க முடியாத அளவு கூடும். வேலை சம்பந்தமான அநாவசியச் செலவுகளையும் இவர்கள் சமாளிக்க நேடும்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைவு மனமகிழ்ச்சியைத் தந்தாலும் சந்தைப் படுத்துவதில் பல வித துன்பங்கள் ஏற்படும். தரகர் - அரசாங்க அதிகாரிகள் முதலியோரின் தொல்லைகளும் கூடும். பண்ணைகளிலும் நல்ல விளைச்சல் உண்டு.

தொழிலாளருக்குச் சீவனத்துக்குப் போதிய வேலையும் - வருமானமும் கிடைக்கும். தொழில் பிணக்குகளும் கூடிய வரை குறையும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நல்ல லாபம் கிட்டும்.

மாணவர் கல்வியில் மேலதிகாரிகளின் தலையீடுகளால் சிறு சிறு பாதிப்புக்கள் ஏற்படும். ஆசிரியர்மாணவர் நல்லெண்ணங்களும்குறைவுறும். எனினும் சுய முயற்சி யுடையவர்கள் பரீட்சைகளை வெற்றிகரமாகச்சமாளித்துக் கொள்வார்கள்.

பெண்களுக்குப் பொதுவாகக் காரியத் தடைகளே அதிகம் ஏற்படும். விவாகாதி முயற்சிகளிலும் இழுபறி நிலைமையே தொடரும். புலனடக்கம் உணர்ச்சி வசப்படாமையால் நன்மை பெறுவர். குடும்பப் பெண்களுக்குக் கணவன் மாரின் அன்பும் அரவணைப்பும் ஆறுதல் தரும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக.18,19;20மு.ப,22இர.23
செப்.4பக,5,6பக,9பக,10,11
துரஷ்ட நாட்கள்:- ஆக.16,17,29,30
செப்.2கா,3,4கா,12,13 முப



## விருச்சிகம்

விசாகம் 4ம் கால், அனுஷம், கேட்டை

இந்த இராசியினருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 10ல் சுவர்ண மூர்த்தியாகப் பெலமடைந்து வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் இந்த மாதம் இவர்களுக்குப் பல வகைகளிலும் சிறப்பான பலன்கள் நிகழும். தேக சுகம் குடும்ப சுகம் என்பன சீராக இருக்கும். பெரியவர்களின் உதவிகள் அரசாங்க உதவிகள் இன சன பந்துக்களின் கொண்டாட்டங்கள்- முன்பு தடைப்பட்டிருந்த காரிய சித்திகள், வீட்டில் சுப மங்கள கொண்டாட்டங்கள் - முதலான சிறப்புகள் பெரும்பாலும் நிகழும். ஏழரைச் சனியின் காலமாதலின் மேற்கூறிய பலன்களில் தடைதாமதங்கள் அலைச்சல் போன்ற சம்பவங்களும் சிலருக்கு நிகழலாம்.

குடும்பத்தில் மனம் போல் வாழ்க்கை சிறக்கும். குடும்ப வருமானமும் கூடும். புத்திரர், பந்துக்கள் உதவிகள் கிடைக்கும். குடும்பத் தானத்தில் சனி யுரேனஸ் இருப்பதால் குடும்ப சுகவீனங்களும் இடைக்கிடை ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் கூடும். வியாபாரமும் சுறுசுறுப் படையும். பழைய கடன் நிலுவைகளும் வந்து சேரும். நிதிநிலையும் சீராக இருக்கும். புது முதலீடுகள் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்ச்சி முதலிய சிறப்புகள் கிட்டும். வேலையில் மனநிறைவும் பெறுவர். உடன் ஊழியர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவு ஏற்படவே செய்யும். எனினும் அரச மானியம் பசளை முதலியன கிடைப்பதால் போதிய விளைச்சலும் அதனால் நல்ல வருமானமும் பெறுவர். விவசாயப் பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும்.

தொழிலாளருக்குச் சிற்சில குழப்பங்களும் பிணக்குகளும் ஏற்பட்டாலும் சீவனத்துக்குப் போதிய வருமானம் தரக் கூடிய வேலைகளும் கிடைக்கும். நாள் சம்பளத் தொழிலாளருக்கும் நாளாந்த சீவனக் கஷ்டம் ஏற்படாது.

மாணவர் கல்வி ஊக்கம் பெறுவர். ஆசிரியர் - மாணவர் மத்தியில் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் ஏற்படும். கணிதத்துறை மாணவர் சிறப்பு முன்னேற்றம் அடைவர். எவ்வாறாயினும் இவர்களின் பரீட்சை முடிவுகள் மனநிறைவு தரும்.

பெண்களுக்குப் பெரும்பாலும் மனநிறைவு பெறச் சாதகமான காலம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரங்கள் - விவாக முயற்சிகள் சாதகமாக முடியும். குடும்பப் பெண்களும் நல்ல காரியங்களைச் செய்யச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு பதவிச் சிறப்புக்கள் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக.16,17,20பி.ப,21,22பக
செப்.6இர,7,8,9கா,12மு.ப
துரதிஷ்ட நாட்கள்:- ஆக.18,19,20மு.ப,31
செப்.1,2அ.கா,4பக, 5,6பக



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 9-ல் தாம்பர மூர்த்தியாக வலம் வருகிறார். இவர் தானபெலம் மூர்த்திபெலம் ஆகிய இரண்டும் குன்றுவது நன்மைதராது. இராசி அதிபதி வியாழனும் சத்துருத் தானத்தில் துர்க்கோசார சஞ்சாரம் செய்வதும் சனியின் குரூர கோசார சஞ்சார காலமும் சேருவதும் சுபபலன்களைத் தராது. தேகசுகம் அடிக்கடி பாதிப்படையும். மனக்குழப்பம், காரியத்தடை, பொருள் நட்டம், தொழில் நட்டம் அல்லது தொழில் இழப்பு-அலைச்சல் - ஏமாற்றப்படுதல் இனபந்துக்களை விரோதித்தல் முதலான துர்ப்பலன்களே அதிகம் நிகழும். தசாபுக்தி அந்தர பலமுள்ளவர்களுக்கு ஓரளவு மனநிறைவு-பொருள்வரவு காரியசித்தி முதலான சுபபலன்களும் நிகழலாம்.

குடும்பத்தில் பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். குடும்பவருமானம் பெருமளவில் வீழ்ச்சியுறும். உறவினர்-சுற்றத்தவரின் பகைவிரோதங்களும் ஏற்படும். கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்தமாதமும் மந்தமாகவே இருக்கும். வாடிக்கையாளரின் வரவும் குன்றும். நிதி நெருக்கடியும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லைகள் கூடிக்கொண்டு போகும். வேலைப் பொறுப்புக்களைச் சுமக்க முடியாது அலைவர்.

விவசாயிகளுக்கு இயற்கை-செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் ஏற்படும். உற்பத்திச் செலவும் கூடும்.

தொழிலாளர் வேலையில்லாப் பிரச்சனையால் மெலிவுறுவர். தினச்சம்பள காரருடைய நாளாந்த சீவியமும் கஷ்டமே. ஒப்பந்தத் தொழில்களிலும் நட்டம் ஏற்படும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்படும். ஆசிரியர்-மாணவர் கல்வி அதிகாரிகளின் கருத்து வேறுபாடுகளால் கல்விக் குழப்பமும் ஏற்படும்.

பெண்களுக்கு மனப்பூசல்களைச் சமாளிக்க வேண்டியும் நேரும். விவாகாதி கருமங்களிலும் முடிவுகள் சாதகமாக அமைவதும் கடினம். குடும்பத்தில் சச்சரவு ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 18,19,20மு.ப.22இரவு. செப். 1,2அ.கா.9பக.10,11.

துரதிஷ்டநாட்கள்: ஆக. 20பி.ப.21,22பகல். செப். 2கா.3,4கா.6இர.7,8,



## மகரம்

உத்தராடம் 2, 3, 4' திருவோணம், அவிட்டம் 1,2.

மகரராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 8ல் (அட்டமத்தில்) ரஜஸமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் குறைவதால் நன்மை தீமை கலந்த பலன்களே நிகழும். குருபகவானின் சுப கோசார சஞ்சாரமும் திருஷ்டியும் இவர்களுக்கு இருப்பது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் திருப்தியாய் இருக்கும். பொருள் வருமானமும் கணிசமாக உயரும். வீட்டில் அல்லது குடும்பத்தில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகள் கூட நிகழச் சாத்தியமுண்டு. அலைச்சல் மூலம் காரிய சித்தியும் பெறுவர்.

குடும்பத்தில் கணவன்-மனைவி நல்லுறவு விருத்தியாகும். குடும்ப வருமானமும் திருப்தி தரும். புத்திரர்-பெரியவர்கள் இனபந்துக்களின் ஒத்தாசை உதவிகள் கூடக் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பார்வைக்கு விறுவிறுப்பாக இருப்பினும் லாபம் குறைவுறும். வங்கி-நிதி இருப்புகள் திருப்தியாய் இருக்கும். முதலீடுகளில் வருமானம் குறையும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுகள் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப்பொறுப்பும் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு விளைச்சல் குறைந்து கொண்டே போகும். வருமானமும் குறைவதால் கடன்பயமும் ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் கவலைதரும். தினச்சம்பளம் பெறுவோருக்கு நாளாந்த வாழ்க்கையே கஷ்டமாக இருக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். கணிதத்துறை-சட்டத்துறை மாணவர் முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு எண்ணங்கள் பெரும்பாலும் கடின உழைப்பால் நிறைவுபெறக் கூடும். விவாக முயற்சிகளும் அலைச்சல் மூலமே கைகூடும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 16,17,20பி.ப.21,22பக. செப். 2கா.3,4கா.12,13,14

துரதிஷ்டநாட்கள்: ஆக. 22இர.23,24 செப். 4பக.5,6பக.9பக.10,11



## கும்பம்

அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக் காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் ஏழாம் வீட்டில் லோகமூர்த்தியாகி வலம் வருவது நன்மை தராது. தேகசுகம், குடும்சுகம் என்பன அடிக்கடி பாதிக்கப்படும். கடந்தகாலங்களிலும் பார்க்க இந்த மாதம் இவர்களின் பொருள் வருமானம் குறைந்து கொண்டே போகும். செலவுகளும் அதிகரிக்கும். வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்கள் நிகழச் சாத்தியம் ஏற்படுவதும் கஷ்டமே.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடும். வீட்டில் ஏற்படும் திடீர்நெருக்கடிகள் முதலியன செலவைத்தரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். ஆனால் நிதி நெருக்கடிகளும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு கடினமான வேலைச் சுமைகளைப் பெறுப்பேற்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளையும் சக உத்தியோகத்தர்களையும் விரோதிக்க வேண்டியும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு விளைச்சல் மகிழ்ச்சி தரும். விவசாயப் பண்ணைகளிலும் நல்ல விளைச்சலும் லாபமும் கிடைக்கும். சந்தை வாய்ப்புக் கிடைப்பதில் சிரமங்களும் ஏற்படும்.


தொழிலாளருக்கு வேலை வசதிகள் கிடைப்பது மகிழ்ச்சி தரும். இவர்களின் நாளாந்த வருமானம் கூடும். தொழிலாளர் மத்தியில் பெரும்பாலும் ஒத்துழைப்பும் அமைதியும் நிலவும்.

மாணவர் கல்விக் குழப்பநிலையிலும் இவர்களின் விடாத சுயமுயற்சியால் முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு மனக்குழப்பம் பெரும்பாலும் ஏற்படலாம். விவாக முயற்சிகளிலும் முன்னேற்றம் காணுவதும் கடினம். குடும்பத்திலும் கணவன்-மனைவி-புத்திரர் துன்பங்கள் தொடருவதால் அமைதி கிடைப்பதும் அரிதே.

அதிஷ்டநாட்கள்; ஆக. 18,19,20மு.ப.22இர.
செப். 1,2அ.கா.4பக.5,6பக.

துரதிஷ்டநாட்கள்: ஆக. 16,17,25,26
செப். 6இர.7,8,9கா.12,13



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

இவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 6-ல் தாம்ரமூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் தானபெலம் பெற்றாலும் மூர்த்திபலம் குறைவது நன்மை தீமை கலந்த பலன்களையே கொடுக்கும். இராசியில் செவ்வாய் இருப்பதும் அதிபன் மிகவும் பாதகமான குரூர கோசார சஞ்சாரம் செய்வதும் கவனிக்கப்படவேண்டும். உடல்நலம் இவர்களுக்கு அடிக்கடிகெடும். குடும்பசுகமும் குன்றும். வருமானமும் குறைவதுடன் செலவும் கூடும். இராசாங்க உதவிகளும் குறைவுறும். புத்திரர் பெரியவர்கள் உதவிகள்கூடக் கிடைப்பதும் அரிதே.

குடும்பத்தவர்களுக்குப் பலப்பல பிரச்சனைகள் ஏற்படும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். துக்கசம்பவங்கள் வீட்டில் அல்லது குடும்பத்தில் ஏற்படவும் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை நீடிக்கும், நிலுவைக் கடன்களை அறவிடமுடியாத கஷ்டங்களும் ஏற்படும். வாடிக்கையாளரும் விலகிச் செல்லுவார். முதலீடுகள் நட்டம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் போக்கால் தருமசங்கட நிலையில் தவிக்கவேண்டிய அவலநிலை ஏற்படும். பதவியில் மாற்றம் அல்லது பதவியிறக்கம்கூட ஏற்படக்கூடும்,

விவசாயிகளுக்கு பயிர் அழிவும் உற்பத்திச் செலவும் தொடர்ந்தாலும் கணிசமான விளைச்சலும் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு குறைந்த அளவிலேயே வேலை வசதிகள் கிடைக்கும். கிடைக்கும் வேலைகளுக்கும் உரிய சம்பளம் கிடைப்பதும் அரிது. தொழில் பிணக்குகளும் கூடும். நாள் சம்பளத் தொழிலாளரின் தினசரி வாழ்க்கையிலும் கஷ்டம் ஏற்படும். எனினும் இரும்பு- எண்ணெய் சம்பந்தப்பட்ட இயந்திரத் தொழிலாளர் வருமானம் கூடும். விபத்துக்களையும் எதிர் கொள்ள வேண்டியும் இருக்கும்.

மாணவர் கல்விக் குழப்ப நிலை நீடிக்கும். ஆசிரியர்- மாணவர்- கல்வி அதிகாரிகளுக்கிடையில் பகைமை- வெறுப்புணர்ச்சிகள் கூடும். மாணவர் மத்தியில் ஏமாற்றம் திகைப்பு விரக்தி முதலான குணங்கள் ஏற்படுதலால் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்படும்.

பெண்களுக்கு கஷ்டமான சூழ்நிலைகளே இந்த மாதமும் தொடரும். விவாகாதி சுப நிகழ்ச்சிகளில் ஏமாற்றப்படக் கூடும். வீண்விரையம், அபவாதம் முதலியனவற்றால் குடும்பப் பெண்கள் மனவேதனை படவும் கூடும்.

அதிஷ்ட நாட்கள்:- ஆக.20பி.ப,21,22பக, 25,26
செப்.2கா3,4கா.6இர ,7,8கா

துரதிஷ்ட நாட்கள்:- ஆக .18,19,20மு.ப ,27,28
செப்.9பக.10,11,14பி.ப,15

சைவ விரதங்களும் விழாக்களும்

# நட்சத்திர விரதங்கள்

(சென்ற இதழ் தொடர்)

'கோப்பாய் – சிவம்'

## வைகாசி விசாகம்

வைகாசிமாத விசாகநட்சத்திரம் முருகப் பெருமான் உதித்த பெருநாளகும். இத்தினத்தில் முருகன் ஆலயங்களில் விசேஷ அபிஷேகம் பூஜைகள் நடைபெறும்.

யமதர்மராஜனின் தினமாக இதனைக்கொண்டாடும் வழக்கமும் சில இடங்களில் உண்டு. சித்திரைச் சித்திரையில் யமனின் கணக்கப்பிள்ளையாகிய சித்திரகுப்தனை வழிபட்டுவிட்டு வைகாசி விசாகத்தில் யமதர்மராஜனை வழிபட்டு நரகபயத்திலிருந்து மீட்சிபெறவேண்டுமென்பது பொருத்தம் தானே.

பௌத்தமதத்தவரும் 'வெசாக்' என்று இந்நாளைக் கொண்டாடுகிறார்கள். ஆழ்வார்கள் பன்னிருவரில் முதல்வரான நம்மாழ்வார் அவதரித்த தினம் இது என்பதால் வைஷ்ணவர்களும் இத்திருநாளைக் கொண்டாடுகிறார்கள்.

## ஆனி உத்தரம்

உத்தர நட்சத்திரம் நடராஜப் பெருமானின் பெருநாள். வருடத்தில் வரும் ஆறு நடேசரபிஷேகங்களில் இதுவும் ஒன்று. மாலைக்காலத்தில் விசேஷ அபிஷேகமும் மறுநாள் அதிகாலையில் ஆனி உத்தர தரிசனமும் நடைபெறும்.

## ஆடிப்பூரம்

அம்பாளின் திருநாள் ஆடிப்பூரம்: அம்பிகையின் ஜனன தினமென்றும் ருதுவாகிய தினமென்றும் (அகிலத்தை ஆண்டருளப் பக்குவம் பெற்ற தினம்) சாதாரண மக்கள் இத்தினத்தைக் கொண்டாடுவர். மஹாலக்ஷ்மியின் அவதாரமாகிய ஆண்டாள் அவதரித்ததும் இத்தினத்தில் தான். அம்மன்கோயில்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், உற்சவங்களும் நடைபெறுகின்றன. ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமையில் வருவது மிகவிசேஷம்.

## ஆவணி அவிட்டம் (உபாகர்மம்)

இருபிறப்பாளர் என்று சொல்லப்படும் பிராமணர் முதலியவர்கள் உபநயனம் என்ற சடங்கின் மூலம் இரண்டாவது பிறப்பை அடைவதாகக் கொள்ளப்படுகிறது. பூணூல் அணிந்து மந்திரோபதேசம் பெறுவதே உபநயனமாகும்.

உபநயனம் செய்தவர்கள் வருடத்தில் ஒரு தடவை முறைப்படி கிரியைகளுடன் மந்திரசகிதமாகத் தமது பழைய பூணூலை அகற்றிப் புதிய பூணூல் அணிந்து விசேஷதர்ப்பணம், வேதாரம்பம் முதலியன செய்வார்கள். இதனை உபாகர்மம் என்பர்.

பிராமணர்களில் ஒவ்வொரு பரம்பரையினர் சிறப்பாக ஒவ்வொரு வேதத்தினைப் பின்பற்றுபவர்களாக இருப்பர். இவ்வடிப்படையில் இருக்கு வேதிகள், யசுர் வேதிகள், சாமவேதிகள் என இவர்கள் அழைக்கப்படுவர்.

யசுர்வேதிகள் ஆவணி அவிட்ட நாளில் தமது உபாகர்மத்தைச் செய்வார்கள். பௌர்ணமியும் இந்நாளில் சேர்ந்து வருவது வழக்கம். இத்தினத்தில் ஏதாவது தோஷமிருப்பின் ஆடிப் பௌர்ணமியில் அல்லது புரட்டாதிப் பௌர்ணமியில் உபாகர்மம் நடைபெறும். பஞ்சாங்கங்களில் இத்தினம் கணிக்கப்பட்டிருக்கும்.

இருக்கு வேதிகள் ஆவணிமாதத் திருவோண நட்சத்திரத்திலும், சாமவேதிகள் ஆவணிமாத அத்தநட்சத்திரமும், பஞ்சமித்திதியும் சேர்ந்த நாளிலும் உபாகர்மம் செய்கிறார்கள்.

உபாகர்மத்துக்கு மறுநாட்காலை எட்டரை மணிக்கு முன் ஆயிரத்தெட்டு காயத்திரி மந்திர ஜபம் செய்ய வேண்டும். காயத்திரியே பிராமணர்களின் மிக உயர்ந்த செல்வமாகும்.

## ஆவணி ஓணம்

திருவோண நட்சத்திரம் விஷ்ணுவுக்குரியது. (திருவாதிரை சிவனுக்குரியது. இரண்டுக்கும் மட்டும் திரு என்ற அடைமொழி சேர்க்கப்பட்டுள்ளது.) ஆவணி மாதத் திருவோண நட்சத்திரத்தை வைஷ்ணவர்கள் மிகவிசேஷமாகக்கொள்வர். கேரளத்தில் இதை ஒரு பண்டிகையாகவே (ஓணப் பண்டிகை) கொண்டாடுவர். இந்நாளில் வீட்டுக்கு வருவோருக்கு விருந்துபசாரங்கள் செய்து புதுவஸ்திரம்வழங்கல் என்று மகிழ்ச்சியுடன் அமையும்.

(வளரும்)

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

நமது உடலுக்குள் உயிர் ஒன்று இருப்பதை நாம் உணர்ந்தாலும் யதார்த்த பூர்வமாக நிரூபிக்க முடியாது. அதே போலவே கிரகங்களின் அதிதேவதைகளை நாம் நிரூபிக்க முடியாவிட்டாலும் அவற்றின் சக்தியை, தாக்கத்தை அனுபவ ரீதியாக உணர முடிகிறது. அந்த தன்மையில் தான் 9 வகையான கிரகங்களின் அதிதேவதைகள் நமது அதிதேவதையை இயக்குகின்றன. என்று முன்னர் கூறினேன்.

இனி இக்கிரகங்களின் 9 அதிதேவதைகளை 9 எண்களால் குறிப்பது சாத்தியமா? அது எவ்வளவு தூரம் பொருத்தமுடையது என்பதை நாம் விளக்க வேண்டி உள்ளது. எண்கள் என்று கூறும் போது அவை குறியீடுகள் என்பதை நாம் அறிவோம். இரசாயனத்தில் மூலகம் என்று அழைக்கப்படுவது இவ்வுலகப் பொருட்களின் மூலப் பகுதிகளாகும். இவற்றில் 105ற்குக் கிட்ட விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். ஆனல் எமது எண்ஞான ஜதிகம் 108 மூலகங்கள் இருக்க வேண்டுமென்பதாகும். இந்த 9 எண்களும் 9 கிரக அதிதேவதைகளின் குறியீடு என்ருல், அவை வெறும் குறியீடு மட்டும் தானு என்ற கேள்வியும் எழுகின்றது.

நமக்கு வேண்டியவர் தாய், தந்தையரோ அன்றி வேறு ஒருவரின் புகைப்படம் நம் வீட்டில் இருப்பதாகக் கொள்வோம், அப்படம் ஏதோ வெறும் காகிதம் என்ருலும் கூட அதை உரிய முறையில் பாவிக்கும் அவ்வீட்டினர் உள்ளத்தில் அந்தப் புகைப்பட அடையாளம் நிச்சயம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நாம் நம் வீட்டில் வைத்து உரிய முறையில் பாவிக்கும் தெய்வ உருவங்கள் நம் உள்ளத்தில் ஏற்படுத்தும் சக்தியை தாக்கத்தை நாம் புரிந்து கொள்வோம். நமது போக்கு அவற்றின் தாக்கத்தால் மாறுபடுவதை உணருகின்ருேம். ஆனல் நாம் இந்தக் குறியீடுகள் சின்னங்கள் உருவங்கள் ஆகியவற்றை எவ்வளவுக்கு உரிய முறையில் பயன்படுத்துகிருேமோஅவ்வளவிற்கு தான் அவற்றின் தாக்கம் சக்தி உணரப்படும் என்பது ஒரு ஆழமான உண்மையாகும். அதைப் போலவே எண்களும் உயிர்ப்புச் சக்திகளின் குறியீடு அல்லது சின்னங்கள்தான் அவற்றை எவ்வளவிற்கு சரியான உரியமுறையில் பயன்படுத்துகிருேமோ அவ்வளவிற்கு எண்சக்தி கலைகளைப் பெற்றுப் பயனடையலாம்.

இதையே வள்ளுவர்

"'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு'' என்ருர்'

அதாவது கணிதமும்— எண்களும்; 1,2,3,4, 5,6,7,8,9; மொழிகளில் வரும் எழுத்துக்களும் அவ்வப்பாஷைகளைப் பேசும் உயிர்களுக்கு கண் போன்று சிறப்புடன் மேன்மையுறின் உயிர்களும் சிறப்புடன் வாழும் என்று அறிவுறுத்துகின்ருர்.

## தொடர் 5: எண்களின் கணித நுட்பங்களும் அவை குறிக்கும் தத்துவங்களும்

கிரகங்களினதும் மனிதர்களினதும் உயிர்ப்புச்சக்தி என்ருல் என்ன வென்றும் 9 அம்சங்கள் ஆகவுள்ள அவற்றை குறிப்பிடப் பாவிக்கும் குறியீடுகளாகிய எண்கள் வெறும் குறியீடல்லாமல் சக்தி வடிவங்களே என்றும் பார்த்தோம். நமது கணக்குகளை வைத்திருக்கப் பயன்படும் இவ் எண்கள், நம்வாழ்க்கையை எங்ஙனம் அளந்து காட்டும் என்பதே நமக்குள்ள கேள்வியாகும். இதற்கு விடைகாண இந்த எண்களின் சில கணித நுட்பங்களையும், அந்நுட்பங்களில் மறைந்திருக்கும் சில தத்துவ உதாரணங்களையும் பார்ப்போம். எண்கள் என்னும் போது 0,1,2,3,4,5,6,7,8,9 ஆகிய இலக்கங்கள் நம் கண் எதிரில் தோன்றுகின்றன. 0 என்று கூறும்போது ஏதுமற்றது என்பதே பொருள், சமாந்திரமான நமது பார

வையைச் சற்று உயர்த்தி அண்ணாந்து பார்த்தால் காற்றுக் கூட இல்லாத பரந்த சூரிய வெளி தெரிகிறது. அந்த ஏதுமற்ற சூரிய வெளியை தொடக்கம் முடிவு இல்லாத ஏகப் பெரு வெளியைக் குறிப்பது இந்த 0 தான். ஏதுமற்ற பெரு வெளி என்றாலும் இன்னொரு விதத்தில் பார்த்தால் இப் பிரபஞ்ச உலகம் என்பதைக் குறிப்பதாகும். இச் 0 தான் அடையாளம். இன்னும் ஆன்மீக உலகம், லௌகீக உலகம் என்று எல்லா வகையான உலகையும் இந்த 0 தான் குறிப்பிடுகின்றது. பஞ்ச பூதங்களில் ஒன்றான நீரைக் குறிப்பதும் இதுதான். இந்தச் 0வை வேறு எந்த இலக்கத்தால் பிரித்தாலும் கிடைப்பது 0 தான். ஆனால் எந்த இலக்கத்தைத்தானும் இந்த 0 ஆல் பிரித்தால் முடிவிலி என்ற எல்லையற்ற பெரிய எண் கிடைக்கும். அகில உலகையும் அடக்கி நிற்கும் அண்டவெளி ஏதுமற்றது போல் இருக்கின்றதென்ற தத்துவ உண்மை இங்கு வெளிப்படுகின்றது.

அடுத்து 1 என்பதை எடுத்துக் கொள்வோம், ஏகம் என்று பொருள்படுகின்றது. அகில உலகிற்கும் அடிப்படை ஒன்றுதான் என்பதைக் காட்டும் அனைத்திற்கும் ஆதாரம் அனைத்தினதும் ஒடுக்கம் ஒன்றுதான். இந்த ஒன்று எல்லா எண்களிலுமே ஒரு பகுதியாக உள்ளது. ஏனைய எண்கள் எல்லாம் இந்த 1க்களால் ஆனவைதான். இது கலவாத எண்கள் இல்லை. அடிப்படை ஆதாரமான அந்த ஏகப்பொருள் கலவாத வேறு பொருள் உலகில் இல்லை என்பது தத்துவம். இந்த ஒன்றை எந்த இலக்கத்தாலும் வகுக்க முடியாது. ஆனால் எல்லா இலக்கங்களையும் இந்த 1 ஆல் வகுக்கலாம். அப்படி வகுக்கும் போது அந்த எண்களின் தன்மை பெறுமதி மாறாமல் இருக்கும். ஒற்றை எண்கள் எல்லாவற்றிற்கும் நாயகமாய் இருப்பது இந்த ஒன்றுதான். தனித்தியங்கும் தன்மையின் அடையாளம் எந்த எண்களையும் எப்படிச் சுருக்கினாலும், இறுதியில் கிடைப்பது இந்த ஒன்றுதான். இது மேலும் சுருங்காது. அனைத்து உலகினதும் ஒடுக்கம் இறுதியில் ஒன்றுதான் என்பதை உணர்த்துகிறது. அதுதான் பரம்பொருள். முற்றாக ஒடுங்கி சலனமின்றி அடங்கி இருக்கும் பொருள் விரிவடைய இயங்க ஆரம்பித்தலை 2 குறிக்கும். விரிவின் முதல்படி, சலனத்தின் அடிப்படை அல்லது ஆரம்பம். இதற்கென்று ஒரு தனித்துவம் கிடையாது. விரிவுபட்ட தன்மையுடையது. தனித்தியங்கும் தன்மையற்ற இன்னொன்றின் சாயலை அல்லது இயக்கத்தைக் குறிக்கும். இரட்டை எண்களின் நாயகன் 2 ஆகும். இதில் இரு ஒன்றுகள் சேர்ந்திருந்தாலும் அவற்றின் தனித்துவம் அங்கே பிரதிபலிப்பதில்லை. தனித்தன்மை வாய்ந்த இரண்டு பொருட்கள் தத்தம் தனித்தன்மையை இழந்து, ஒன்றிற்கேற்ப மற்றது ஒருங்கமைந்து, ஒத்தமைந்து இருக்கின்ற ஒரு நிலையைக் குறிப்பதும் இந்த இரண்டு தான்.

மூன்று எண் 1 ற்கு அடுத்த 2வது ஒற்றை எண் ஒன்று என்ற தனித்துவப் பொருள் 2 என்ற இயக்கத்தைப் பெறும் போது சக்தி என்பது வெளியாகும். இந்தச் சக்தியைக் குறித்து நிற்பதுதான் மூன்று ஆகும். இது எண்கள் 1,2 குறிப்பதைவிட முற்றிலும் வேறுபட்ட ஒரு தன்மை என்பது வெளிப்படை. உலகம் 9 அம்சங்களாகப் பிரிக்கப்பட்டாலும் 3 பிரிவாகப் பிரிக்கும் ஒரு ஆரம்பப் பகுப்பு முறையும் உண்டு. ஒரு தளப்பரப்பை எல்லையிட்டுக் காட்ட ஆகக் குறைந்தது மூன்று பக்கங்கள் வேண்டும். இதை முக்கோண வடிவம் என்பேசம். உலக சூட்சுமச் சக்தியின் தத்துவக் குறி இவ்வடிவமாகும். எந்தவொரு எண்ணையும் திரும்ப திரும்ப எழுதி அதை 3ஆல் பிரித்தால் ஏதாவது 3 எண்களே திரும்பத் திரும்ப வரும். எவ் எண்ணையும் 3ஆல் பெருக்கும் போது வரும் விடையின் கூட்டெண் 3 அல்லது 6 அல்லது 9வரும் என்பதை நேயர்கள் பரீட்சித்துப் பார்க்கலாம். உலகின் முக்கிய அம்சங்களான தந்தை, தாய், பிள்ளை பதி, பசு, பாசம்/அரன், அரி, அயன் என்பனவும், இயல், இசை, நாடகம் ஆன நம் முத்தமிழும், மூவேந்தரும் முக்குளம் முக்காலம் என்பவற்றையும் குறித்து நிற்பது இம் மூன்றும் எண் ஆகும்.

---

## யார் லட்சாதிபதி?

யோகத்தானமும் (Yoga Point), அதிஷ்டத்தானமும் (Pars Fortuna) ஒரே நட்சத்திரத்தில் இருந்தால் அந்த ஜாதகர் லட்சாதிபதியாவார். ஒரே இராசியில் இருந்தால் பெரிய செல்வந்தர். கிட்டிய இராசிகளில் நின்றால் சுமாரான செல்வம் படைத்தவர். லக்கினம் உதயமாகும் போது உதயமாகும் நட்சத்திர அதிபதியும், யோகத்தானம் உதயமாகும்போது உள்ள நட்சத்திர அதிபதியும் ஒரே கிரகமாயின் பிறந்தநாள் முதல் இறக்கும் வரை சுகபோக செல்வத்தை அனுபவிப்பர்.

— வே. சி.

---

# அகால மரணமும் பிதிர்களும்

— வே. சின்னத்துரை, நல்லூர். —

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இச்சாதகர் பிறந்தது 28-4-23ல். இவர் வன்செயலால் மடிந்தது. 13-3-85ல். இங்கும் அச்சித்தாந்தம் காணப்படுகிறது. சனியும் சந்திரனும் உடனுறைகின்றன. செவ்வாய் இராகுவைப் பார்த்து அதன் சக்தியைதான் பெற்றுக்கொண்டு தன் 12-ம் பார்வையால் சனியையும் சந்திரனையும் ராகு பார்த்துக் கூட்டுறவை உண்டாக்குகிறது:

| | | | |
|---|---|---|---|
| வெ | சு | பு<br>செ | |
| கே | | | |
| | | | ரா |
| | | வி<br>ல | சந்<br>சனி |

இச்சாதகர் முன்கூட்டியே திட்டம் தீட்டி ஒருவரை வாளால் வெட்டிக் கொலை செய்தார். உயர் நீதிமன்றில் குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்யப்பட்டார். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்றதற்கிணங்க இவர் கொலை செய்தவரின் பிதிர் இவர் பின்னேயே 18 வருடம் சுற்றித்திரிந்து இவரை போராளிகளால் கொல்ல வைத்தது. பார்த்தீர்களா பிதிர்களின் அபார சக்தியை.

இதே வருடத்தில் மே மாதத்தில் பிறந்த இன்னுமொருவரின் சாதகம் இதே போன்றதே எல்லா கிரக நிலைகளும் லக்கினமும், ஆனால் சந்திரன் மாத்திரம் மகரத்தில் நின்றது. இந்த ஆள் இப்பவும் சுகம் பெலமாக இருக்கிறார்: இங்கே அந்த சித்தாந்தம் நிறைவேறவில்லை.

இன்னுமொரு வன்செயலால் மடியப்பட்டதென்று கருதும் ஒருவரின் சாதகத்தைப் பார்ப்போம்; இவர் 20-10-36ல் பிறந்தவர்: என்னிடம் வந்து சோதிடம் பார்த்துவிட்டு தம் வீடு சென்றார். ஆனால் அவர் இல்லத்தை சென்றடையவில்லை. 11-11-87ல் வீட்டைவிட்டு வெளிக்கிட்டவர் வீடு திரும்பவில்லை. நாலு நாட்கள் சென்ற பின்புதான் வீட்டுக்காரர் தேடுதல் செய்தனர்.

| | | | |
|---|---|---|---|
| | | | கே |
| சனி | | | |
| | | | செ |
| | வி, சந்<br>வெ | ல,சு | பு |

ஆசுப்பத்திரிக்கு என்று யாழ்ப்பாணம் சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை. இவருக்கு என்ன நடந்தது. இவருக்கு சனி, சந்திரன், செவ்வாய் ஒன்றுக்கொன்று கேந்திரம் பெறுகின்றது. இவருக்கு ஒரு விபத்து வரும் என்று சொன்னேன். அவருக்கு அப்போ செவ்வாய் தென்திசையில் செவ்வாய் புத்தியே நடந்துகொண்டிருந்தது: ஆகையால் கவனமாயிருக்கும்படி சொன்னேன். அதுமாத்திரமல்லாமல் இப்போ நாலரை, ஐந்து மணியாகிறது. இங்கு நின்று நாளை காலை போகலாம். ஊரடங்குச் சட்டம் 6 மணி வரை என்று சொன்னேன். தனது ஆயுளைக் கணிக்கும்படி கேட்டார். இவருடைய சாதகத்தின்படி இவருக்கு வயது 50 மாசம் 6. ஆனால் அன்று அவருக்கு 50 வயது 10 மாதம் 21 நாள் ஆகிவிட்டது. இவர் இங்கு நில்லாமல் தன் மனைவி பிள்ளைகள் தனக்குக் காத்திருப்பார்களென்று சொல்லி தான் குறுக்கு வழிகளால் போய் விடுவேனென்று சொல்லிப் போய்விட்டார். வழியில் இரவானதால் ஐ. பி. கே. எவ் சுட்டுவிட்டார்கள் போலும். அவரது சைக்கிலும் மூக்குக் கண்ணாடியும் குளப்பிட்டிச் சந்தியில் கண்டெடுக்கப்பட்டது. இதை அவமிருத்துச்சாவு என்று சொல்லிவிட முடியாது. வன்செயலால் மடிந்திருக்கலாம். ஆனால் மிருத்து சாவாகும். இவருடைய பிதிர் அலைந்து திரியப்

போவதில்லை. அது இன்னுமொரு பிறவியை உட னடியாகவே எடுத்துவிடும். இவருக்கும் அந்தத் துர்க் கிரகங்கள் கேந்திரமடைந்தது மாத்திரமல்ல சனியும் செவ்வாயும் ஒன்றையொன்று பார்த்தது. சந்திரனைச் செவ்வாய் பார்த்தது.

தனக்கு மேலுயர்ச்சி இருக்கிறதா? என்பதனைக் கேட்கத்தான் வந்தார். அது ஒன்றும் இல்லை. இழப்பையும் நட்டத்தையும்தான் காட்டுகிறது என்றேன். 10-9-87 தொடக்கம் 7-2-88 வரை உமக்கு காலம் கூடாது என்றேன். அத்துடன் போனவர் போனதுதான்.

இந்தப் பிதிர்கள் எல்லாம் எங்கெங்கே பந்த பாசமுண்டோ அங்கங்கெல்லாம் சென்று அவர்களுக்கு ஏதோ விதத்தில் தென்படுகிறது. இதற்கு ஒரு உதாரண சாதகத்தை தருகிறேன். இச்சாதகர் பிறந்தது 16-10-35ல்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | கே |
| சனி | | | |
| | | | வெ |
| ரா | செ,வி | பு | ல,சூ |

இவர் ஒரு மின்சாரப் பொறியியலாளர். தென் அரேபிய அரசருக்கு இவர் பெரிய ஆலோசனை கூறுகிறவர். இவர் மின் துறையில் பீ. எச். டி. பட்டம் பெற்றவர். இவர் அடிக்கடி இங்கு என்னிடம் சோதிடத்திற்கு வருபவர். கடைசியாக வந்த நேரத்தில் சனி, செவ்வாய், சந்திரன் கேந்திரமெய்தியதால் ஒரு விபத்து காத்திருக்கின்றதென்றேன். ஆயுளைக் கணிக்குமாறு வேண்டினர். ஆயுள் 53 வரைதான் உள்ளது என்றேன்; அப்போ அவருக்கு வியாழ தெசையில் செவ்வாய் புத்தி நடந்து கொண்டிருந்தது. 46 வயது அப்பதான் முடிந்திருந்தது. வியாழன் செவ்வாயுடன் கூடியிருந்து சந்திரனைப் பார்க்கிறது. ஆனாலும் என்ன பிரயோசனம். வியாழன் மாரகாதிபதியாச்சே. 1-8-82ல் மோட்டார் விபத்தில் சிக்கி மரணமானார். அப்போது அவருக்கு வயது 46-5-15.

1-4-82ல் மதிய போசனத்தின் பின் அவர் மைத்துனர் யாழ்ப்பாணத்தில் நித்திரை கொண்டிருக்கும்போது மாலை 2 மணியளவில் தனது மைத்துனர் கேற்றைத் திறந்துகொண்டு வீட்டுக்கு வருவதைக் கனவில் கண்டார். இதை தனது மனைவிக்கு எடுத்துரைத்தார். இது பிரமை என்று மனைவி சொன்னாள். பின்பு மாலை 5 மணியளவில் கொழும்பிலிருந்து தொலைபேசிச் செய்தி வருகிறது. அவர் அத்தேசத்தில் இறந்து விட்டாரென்று; பின்பு ஒரு வாரத்தால் அவரது பூதவுடல் இலங்கைக்கு கொண்டுவரப்பெற்று செத்தவீடு கொண்டாடப்பட்டது. அந்த நாட்டில் இறந்த ஷணமே பட்சபாசம் உள்ள இடத்துக்கு அந்தப் பிதிர் ஓடி வந்துவிட்டது. (முற்றும்)

## சனி
## விருச்சிகத்திலா? தனுவிலா?

ஆனிமாதச் சோதிடமலரில், இதைப் பற்றி விளக்கமளித்திருந்தோம். ஆயினும் பலர் இது சம்பந்தமாக நேரிலும் கடிதமூலமும் தமது ஐயப்பாட்டைத் தெரிவித்துள்ளார்கள். சில சோதிடர்கள் சனி விருச்சிக ராசியில் இருப்பதாகப் பலனெழுதி விற்பனை செய்வதையும் ஒரு சோதிடர் திருக்கணிதப் படி சனிக்கு வக்கிரமில்லை என்றெழுதியிருப்பதையும் சுட்டிக்காட்டியிருப்பதோடு சனி தனுராசியிற்றான் இருக்கிறதென்பதை பிரதியட்சமாக நிரூபிக்கமுடியுமா என்றும் சிலர் கேட்டிருக்கிறார்கள். அதனால் சந்தேகப்படுபவர்களையும், சனி விருச்சிகத்திலேயே இருக்கிறதென்று வாதிடும் சோதிடர்களையும் ஆவணி 7–ம் திகதி (22-8-88) திங்கட்கிழமை நள்ளிரவில் சனி - சந்திர சமாகமத்தை அவதானித்து தமது ஐயப்பாட்டை தீர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம்

22-8-88 திங்கள் அன்று நள்ளிரவு 12 மணிக்கு சந்திரனிற்கு வடக்கில் சனி 6°யிற் காணப்படும். அப்பொழுது சனியும் சந்திரனும் தனுராசியில் 2° 16′ யில் இருக்கும். அதாவது வடக்குத் தெற்காக ஒரே நேர் கோட்டில் காணப்படும். அப்பொழுது திருக்கணிதப்படி சந்திரன் தனுராசியில மூலம் 1-ம் பாதத்திலிருக்கிறது. சனியும் மூலம் 1-ம் பாதத்திலேயே இருக்கிறது. ஆனால் வாக்கியப்படி சந்திரன் மூலம் 2-ம் பாதத்திலும் சனி விருச்சிகராசியில் கேட்டை 3-ம் பாதத்திலும் இருக்கின்றன. சந்திரன் தனுராசியிலுள்ள மூலநட்சத்திரத்திலிருக்கும்போது அதனுடன் சமாகமமாகும் சனி தனுராசியிலில்லாமல் எப்படி விருச்சிகராசியில் இருக்க முடியும்?

சந்தேகிப்பவர்களும் விவாதிப்பவர்களும் இச்சமாகமத்தை நேரில் பார்த்து சனி தனுராசியிற்றான் உள்ளதென்பதைப் பிரத்தியட்சமாக அறிவார்களாக.

# திருமணத்திற்கு முன்பு

(கா. சின்னையா — சங்குவாரி — கம்பளை)

மானிடனுக்குத் திருமணம் அவசியமா? மனிதன் மறுபிறவிக்கு விதையானதால் மானிடனுக்குத் திருமணம் மிகவும் முக்கியமானதே எனக் கூறப்படுகிறது. ஆனால் எப்படிப்பட்ட மனிதனுக்குத் திருமணம் தேவை என ஆராயப்புகின், வயதான பெற்றோரைக் காப்பாற்றும் கடமை உள்ளவன், தன் வம்சம் செழிக்க புத்திரனை விரும்பியவன், பெண்ணாசை தவிர்க்க முடியாதவன், குடும்ப நலத்திற்கு ஊதியம் பெற்று உழைப்பவன் போன்றோருக்குத் திருமணம் அவசியம் எனக் கருதலாம்.

அப்படியானால் எந்தவகை மனிதருக்குத் திருமணம் அவசியமில்லை எனும் கேள்வி எழலாம்? தன் நிலைமை உணராது நடப்பவன் மதுவகை அருந்தி மதி இழந்தவன், சோம்போறி, மன அமைதி இல்லாது உலகத்தை வெறுத்தவன், தகுதியான வருமானமின்றி உழைப்பவன், வியாதியஸ்தன், மதகுரு இவர்கள் போன்றோர் விரும்பினாலன்றி திருமணம் தேவையில்லை எனக் கூற இடமுண்டு.

அடுத்து அண்ணன் இருக்கும் போது தம்பிக்குத் திருமணம் நடத்தலாமா? திருமணம் செய்யக் கூடாது என்று சொல்ல இடமிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் குடும்பத்தில் மூத்த மகன், படிப்பில்லாத சோம்பேறி - இளையவன் கல்வியில் தேர்ச்சி பெற்று நல்ல உத்தியோகத்தில் உள்ளவன். இந்த நிலையில் பெரியவனுக்காக வந்த பெண்வீட்டுக்காரர் இளையவனை மனதில் கொண்டு எங்க வீட்டுப் பொண்ணு இரண்டாவது மகனுக்குப் பொருத்தம் நன்றாக இருக்கும் எனச் சாடையாகக் கூறிச் சென்று விட்டார். இந்தத் தர்ம சங்கடமான தருணத்தில் அண்ணன் காரர் தன் நிலையை உணர்ந்து தனது அன்புத் தம்பியைத் - தம்பீ! திருமணம் செய்து கொண்டு நல்வாழ்வு பெறுவாயாக என்று மனப்பூர்வமாக தெய்வ சந்நிதியில் நல்லாசி வழங்கலாம். அண்ணன் அனுமதி பெற்ற தம்பி அண்ணனுக்கு முன் திருமணம் செய்து கொள்வதில் தவறு ஒன்றும் இருக்காது - என்றாலும் ஒரே குடும்பமாக ஒரே வீட்டில் வசிப்பவர்களானால் தமையனுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்துவது நலமல்ல. தவிர்க்க முடியாத நிலையில் பரவாயில்லை: பெண்ணுக்கும் இந்த விதி பொருந்தும்.

இங்கே தான் "திருமணத்திற்கு முன்பு', ஜோதிடர்களின் உதவியைப் பெறவேண்டியுள்ளது அதாவது ஜாதகத்தில் ஏழாம் பாவத்தில் சுக்கிரன் குருவும் நிற்க எல்லாவித தொழில்களிலும் அனுபவமும் திறமையுடன் ஒரு காரியத்தை முடிக்கும் தன்மை வாய்ந்தவருடைய பெண்ணை மணம் புரிவர். சூரியன் செவ்வாய் நிற்க, அரசரைப் போன்ற தகுதிவாய்ந்தவரின் மகளை மகிழ்வுடன் மணந்து கொள்வார் எனவும், சந்திரன் - புதன் கூடி நிற்க வியாபாரம், வர்த்தகம் செய்பவரின் அருமைப் பெண் மனைவியாகவும் அமையும் என்றும், சனி நிற்க வர்த்தகத்தில் நன்கு பொருளீட்டி காலம் கடத்தும் தனவந்தரின் பெண்ணும் அமையலாம் எனவும், இராகு கேது ஏழாம் பாவத்தில் நிற்க மிக எளிமையானவரின் மகள் மனதுக்கு உகந்தவளாக அமையலாம் என அவரவர்களின் ஜாதக கிரக அமைப்பு நன்மையை ஒட்டியாவும் அமைந்திருப்பதைக் கணித்துச் சொல்லிவிடும் ஜோதிஷ மேதைகளின் உதவியைப் பெற வேண்டுமென்பதாகும்.

திருமணத்திற்கு முன்பு மணமகன் மணமகள் ஜாதகத்தையும் பார்த்து இவர்கட்குப் பொருத்தம் உண்டா எனப் பார்த்துக் கொள்வதைத் தான் திருமணப் பொருத்தம் என்பர்.

முக்கிய குறிப்பு!

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும்: கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

# ஆய்வு மன்றம்

செ. ரவி , அளவெட்டி

தங்களுக்கு 1989-7-19 வரை குருதசை நிகழும். குரு 7-ம் வீட்டதிபதியாக இருப்பதனுல் இக்காலத்துக்குள் மங்கள கருமம் கைகூட இடமுண்டு. கோசரப்படியும் ஜன்மவியாழன் இருப்பிட மாற்றத்தைக் காட்டுகிறதே. குருவுக்கு வழிபாடு மேற்கொண்டுவரவும்.

S.S. பத்மராஜா , யாழ்ப்பாணம்:

தங்களுக்கு தற்போது சனிதசையில் புதன் புத்தி நிகழும். புதன் லக்கினதிபதி, 10-ம் அதிபதியாக இருப்பதனுல் தொழில் அனுகூலமுண்டு. தொழில் ஸ்தானதிபதி 7-ல் நீசம் பெற்று சனியுடன் கூடியுள்ளமையால் தொழில் துறையில் சிக்கல்கள் ஏற்படலாம். இருப்பினும் 1989-4-17 வரையுள்ள சனிதசை புதன் புத்தி காலத்தில் முயற்சி செய்து பார்க்கவும்.

செ. ரவி , அளவெட்டி:

உங்கள் ஜாதகப்படி குருதசை நடக்கின்றது. குரு 6-ம் இடத்தில் இருக்கின்ருர். எனவே தங்கட்கு மாறி மாறி ஏதாவதொரு நோய் இருந்து கொண்டுதான் இருக்கும். தற்போது வியாழ சுகமும் இல்லை. எனவே வியாழனுக்கு வழிபாடு மேற்கொண்டுவரவும்.

பெ. ராஜலக்ஷ்மி , சுளிபுரம்.

உங்களுக்குத் தற்போது புதன்தசையில் ராகு புத்தி நடக்கின்றது. புதன் திருமணத்தைக் குறிக்கும் 2, 11-ம் வீடுகளுக்கு அதிபதியாகி 10-ல் சஞ்சரிக்கின்ருர். கோசரப்படியும் வியாழ சுகம் நன்ருக இருக்கின்றது. எனவே 1991-3-15 வரையுள்ள ராகுபுத்திக்காலம் திருமணம் நடைபெறுவதற்கான வாய்ப்பைக் கொடுக்கும்.

செல்வி செ. லக்சுமி, மட்டுவில் வடக்கு

உங்கள் ஜாதகத்தில் 7-ம் இடத்தில் செவ்வாய் இருப்பினும் அச் செவ்வாய் வளர்பிறைச் சந்திரனுடன் சேர்ந்திருப்பதாலும், சூரிய இராசியான சிங்கவீட்டில் இருப்பதனுலும் செவ்வாய் எதுவித தோஷத்தையும் தரமாட்டார்.

செல்வி J. ஜெயலட்சுமி, தும்பளை, பருத்தித்துறை

உங்களுக்கு 7-ம் அதிபதி 12-ம் இருப்பதனுலும் திருமண விடயத்தில் காலதாமதம் காட்டுகிறது. இருப்பினும் இப்போது ராகுதசையில் குருபுத்தி நிகழ்கின்றது. குரு 11-ம் வீட்டிற்கும், மாங்கல்யஸ்தானத்திற்கும் அதிபதியாகி 7-ல் இருப்பதனுல் முயற்சிப்பின் விரைவில் திருமணம் நடக்க இடமுண்டு. வியாழசுகமும் நன்ருக இருக்கின்றது.

ச. அகிலன், அல்லாரை வடக்கு

உங்கள் ஜாதகப்படி 1989-12-7 வரை ராகு தசையில் குருபுத்தி நடக்கின்றது. குரு 9-ம் வீட்டுக்கு அதிபதியாகி லக்கினத்தில் உச்சம் பெறுவது நன்று. எனவே இக்காலத்தில் அந்நிய நாட்டுக்கான பிரயாணம் மேற்கொள்ள உகந்தது.

ந. நந்தகுமார், சுளிபுரம்

தங்களுக்கு 1989-8-29 வரை சூரிய தசையில் குருபுத்தி நடக்கின்றது. அதன் மேல் சனி புத்தி ஆரம்பிக்கும். சனி 12-ம் வீட்டுக்கு அதிபதியாகி லக்கினத்தில் பெலம் பெற்றிருப்பதால் சூரியதசை சனிபுத்திகாலம் பிரயாண வாய்ப்புகளை ஏற்படுத்தும். கோசரப்படி குரு, சனி மாற்றங்களும் நற்பலன்களைத் தரக்கூடியதாக இருக்கின்றன.

ந. சுதன், சரவெட்டி மத்தி

தங்கள் ஜாதகப்படி சனியும், ராகுவும் 9-ம் வீட்டில் சஞ்சரிக்கின்றனர். தற்போது நடப்பது சனிதிசையில் ராகுபுத்தி. இது 1990-11-1 வரை நிகழும். இக்காலம் அந்நிய நாட்டில் இருப்பதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன. 10-ம் வீடு சரராசியாக அமைவதனுல் எத்தொழிலையும் நிரந்தரமாகச் செய்யக் கூடிய தன்மை குறைவாக இருக்கும். பிறநாட்டுடன் தொடர்புடைய தொழிலே அனுகூலமாகும். துலா லக்கினத்திற்கு சனி யோககாரகனுகும்.

சி. சுவாமிநாதபிள்ளை, மீசாலை வடக்கு

உங்கள் ஜாதகத்தில் களத்திரகாரகன் களத்திரஸ்தானத்தில் இருப்பது, களத்திரதோஷமாகும். எனவே குடும்ப வாழ்க்கையில் உங்களுக்குப் பூரண திருப்தி கிடைப்பது கஷ்டம். குடும்பத்தானத்தில் ராகு இருப்பதும் உகந்ததல்ல. 1988-10-2 வரை புதன்தசையில் குருபுத்தி நிகழும். அதன் மேல் சனிபுத்தி நிகழும். சனி துலா லக்கினத்திற்கு யோககாரகனுகி 6-ல் இருப்பது நன்று. எனவே 1988 அக்டோபரின் மேல் குடும்ப

ஒற்றுமைக்கு இடமுண்டு. மனிதசுபாவத்தில் பிழை விடுவது இயல்பு. எனினும் அதனை மனத் திடத்துடன் விட்டுக் கொடுத்து வாழ்க்கையில் எதிர் நீச்சலுடன் முன்னேறுவது தான் மனிதப் பண்பாடு.

மனோகரன், நாவலப்பிட்டி.

தங்கள் ஜாதகப்படி 5-ல் ராகு இருப்பது புத்திரக் குறைவைக் காட்டினும், புத்திரகாரகன் 2-ல் ஆட்சிப்பெறுவது நன்று. எனினும் குழந்தைப் பலன் ஆராய்வதற்கு மனைவியின் சாதகத்தையும் பார்த்தே பலன் கூறலாம்.

க. கனகரத்தினம், கொழும்பு.

உங்களுக்கு சனிதசையில் புதன்புத்தி நடக்கின்றது. சனி துலாலக்கினத்திற்கு 10-ல் யோக காரகனாகி இருப்பதால் தொழில்துறையில் மிகவும் சிறப்பான பலன்களை அடையப் பலனுண்டு. மேலும், தற்போது பொங்குசனி (ஏழரைச்சனி) நடப்பதும் பலவித முன்னேற்றங்களுக்கும் உகந்த காலமாகும்.

எஸ். ஸ்ரீநிவாசன், அல்வாய் வடக்கு.

உங்கள் ஜாதகப்படி தற்போது சனிதசையில் குருபுத்தி நடக்கின்றது. குரு 9-ம் அதிபதியாகி 12-ம் இடத்தில் இருப்பது அந்நியநாட்டுப் பிரயாணத்திற்கு வாய்ப்பான காலமாகும். மனைவிக்கு 9-ம் அதிபதி குருவின் தசாகாலம் நடப்பது ஏற்றதாகவே அமைகின்றது. 1989 வரையுள்ள காலப்பகுதி உகந்தது.

ச. லிங்கம், பதுளை.

தங்களுக்கு களத்திரகாரகன் பலமற்று இருப்பதும், 2,7,11-ம் வீட்டதிபர்கள் பலம் குறைந்து சஞ்சரிப்பதும், சூரியன், செவ்வாய் சேர்ந்திருப்பதும் திருமணம் தாமதத்திற்கான காரணங்களாகும். தற்போது செவ்வாய்தசையில் புதன்புத்தி நடக்கின்றது. செவ்வாய்தசை பிற்பகுதியில் விவாகம் நடைபெற இடமுண்டு.

சு. மலர்மகள், வட்டுக்கோட்டை.

தங்கள் ஜாதகத்தில் களத்திரகாரகன் களத்திரஸ்தானத்தில் இருப்பதும், 2-ம் வீட்டையும் 7-ம் அதிபனையும் சனி திருஷ்டிப்பதும் விவாகம் தாமதமாகின்றது. எனினும் சுக்கிரன் 7-ல் இருப்பதால் விவாகம் நடக்கும். காலவரையறைபற்றி ஆராய தசாபுத்தி விபரங்கள் சரியாக இல்லை.

வி. விஜயசேகரன், உரும்பிராய்.

தங்களுக்கு சூரியன், புதன் சேர்ந்திருப்பது கல்வித்துறைக்கு சிறப்பான யோகமாகும். அத்துடன் வியாழன் லக்கினத்தைத் திருஷ்டிப்பதும் நன்றே. பரீட்சையில் நல்லபெறுபேறு கிடைக்கும்.

எஸ். எம். ராஜா, யாழ்ப்பாணம்.

தங்கட்கு 1989-3-11 வரை புதன்தசையில் குருபுத்தி நிகழும். அதன் பின்னர் சனிபுத்தி ஆரம்பிக்கும். புதன் 9-ம் வீட்டிலிருப்பதும், சனி 12-ம் வீட்டிலிருப்பதும் அந்நியநாட்டுப் பிரயாணத்திற்கு வாய்ப்பான காலமாகும். 10-ம் வீடு புதனுடைய வீடாக அமைவதால், கம்பியூட்டர் கணக்குத்துறை முதலியன சம்பந்தப்பட்ட தொழிலே அனுகூலமாகும். அந்நிய நாட்டுத் தொழில் வாய்ப்புகள் கிடைக்க இடமுண்டு.

ரஜனி, யாழ்ப்பாணம்.

உங்களுக்கு தற்போது குருதசையில் சுக்கிர புத்தி நடக்கின்றது. சுக்கிரன் களத்திரகாரகனாகி 2-ல் இருப்பதும், குரு 8,11-ம் அதிபதியாக வருவதும் திருமணத்திற்கு உகந்த காலமாகவே இருக்கிறது. மேலும் 7-ம் அதிபதி 12-ல் இருப்பதால் அந்நியநாட்டுத் தொடர்புடையவரே மணாளனாக வாய்ப்பார். தொழில்நுட்பவியலுடன் சம்பந்தப்பட்ட தொழில் புரிபவராக இருக்கும். எதிர்கால வாழ்க்கை நன்கு அமையும்.

யோ. யோ. யோகராசா, யாழ்ப்பாணம்.

தங்கட்கு அடுத்த ஜனவரி மாதமளவில் பதவியுயர்வு கிடைக்க இடமுண்டு. தங்கள் ஜாதகம் இராச யோகமுள்ளது.

ஜெ. கஜபாகு, மல்லாகம்.

உமது ஜாதகத்தில் லக்கினாதிபதியான வியாழன் 6-ல் இருப்பதும், மனகாரகன் சந்திரன் 8-ல் இருப்பதும் தேகசுகம் நன்றாக இருக்க இடம் கொடுக்கமாட்டார்கள். 8-ல் சந்திரன் தேக மெலிவைக்காட்டும். தற்போது கேதுதசை நடப்பதால் இதில் முன்னேற்றமிருக்காது. அம்பாளுக்கு வழிபாடு, அர்ச்சனை என்பன மேற்கொண்டு வரவும்.

எஸ். சிவசிவாயா, மாத்தளை.

தங்கட்கு சுக்கிரன் 8-ம் வீட்டில் சனியின் பார்வையைப் பெற்று இருப்பதால் சுக்கிர தசையில் எவ்வித முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. வெள்ளிதசை எல்லோருக்கும் யோக தசை என்று கூறவியலாது. இருக்கும் இடத்தை அறிந்தே பலன்சொல்ல வேண்டும்.

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.





மாணவ மணிகளே!

திருக்குறளைத் தினமும் படியுங்கள்

சம்பூர்ண சலவைக்கு நுரைவளம் கூடிய

மில்க்வைற் நீலசோப்பை

வாங்கி உபயோகியுங்கள்.

ஒரு கட்டி விலை ரூபா 3/- மட்டுமே!

100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி அழகிய மூவர்ண திருவள்ளுவர் படத்தையும், திருக்குறள் ஸ்ரிக்கர் ஒன்றையும் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ | 54-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, | 90-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, | 192-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, | 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri; Sri Lanka. Phone: 280